விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 05 செவ்வாய்க்கிழமை (19.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 151

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# தமிழர் தாயகமெங்கும் உணர்வுகள் தகிப்பு

## முள்ளிவாய்க்கால் படுகொலை நாளில் உறவுகள் திரண்டு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெற்ற இறுதிப் போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களினை நினைவுகூரும் வகையில் நேற்றைய தினம் தாயகத்திலும் புலம்பெயர் தமிழர் வாழும் தேசங்களிலும் முள்ளிவாய்க்கால் படுகொலை நாள் பெரும் உணர்வு எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. தாயகத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் புலம்பெயர் தேசங்களில் இந்தியா, சுவிற்சர்லாந்து, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ் உட்பட தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற நாடுகளிலும் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)



## மாணவி கொலையுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் மீது தாக்குதல்

**3 வீடுகள் தீக்கிரை; இருவருக்கு வாள்வெட்டு**



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் கொலை வழக்கில் கைதான சந்தேக நபர்களை மருத்துவ பரிசோதனைக்காக கொண்டு செல்லும்போது பொதுமக்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டு அவர்களை கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலை நேற்றையதினம் பெரும் களேபரமாக காட்சியளித்ததோடு தாக்குதல் தாங்க முடியாமல் சந்தேக நபர்கள் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவை கொலை செய்த சந்தேக நபர்களை மருத்துவ ஆய்வு செய்வதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு யாழ்.பொலிசாரினால் அழைத்து செல்லப்பட்டபோது திடீரென மக்கள் திரண்டு அவர்களை சுற்றிவளைத்து பொலிசார் முன்னிலையில் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் பொலிசார் சந்தேக நபர்களை தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில் அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு இழுத்து சென்றனர். 24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ தடுப்பில் பாலகுமாரன்?



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரனும் அவரது மகனும் மற்றும் ஒருவரும இராணுவத்தின் பிடியில் இருப்பது போன்ற ஒரு புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது. இப் புகைப் படத்தினை பிரிட்டிஷ் ஊடக வியலாளர் பிரான்சிஸ் ஹரிசன் தனது டுவட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

பாலகுமாரன் இறுதிப் போரில் சரணடைந்த பின்னர் இதுவரை அவர் பற்றிய தகவல் ஏதும் தெரியாதுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தமிழரின் சோகவரலாற்று பதிவு முள்ளிவாய்க்கால் சரித்திரம்

**கொடூர உண்மைகள் மறைக்கப்பட்டன—முதலமைச்சர்**



(முல்லைத்தீவு)

தமிழர்கள் மீதான கோரப்படுகொலைகள் நடந்தேறிய முள்ளிவாய்க்கால் எமது சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப் பதிவு. போரிலே உயிரிழந்த எம் உறவுகளை என்றென்றும் நினைவு கூரத் தமிழர்களாகிய நாம் கடமைப் பட்டுள்ளோம் என தெரிவித்துள்ள வடக்கு 24ஆம் பக்கம் பார்க்க....

## போரின் இறுதிக் கட்டம் தொடர்பில் ஐ.நாவிடம் சாட்சியம் அளித்தேன்

**– சொல்ஹெய்ம்**

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக ஐ.நா விசாரணைக் குழுவிடம் தான் சாட்சியம் அளித்துள்ளதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒனறுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் இச்செவ்வியில் அவர மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்ற எனக்குத் தெரிந்த விபரங்கள் மற்றும் வெள்ளைக் கொடி விவகாரம் குறித்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவிடம் தெரிவித்துள்ளேன்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளிவரவுள்ள இலங்கை தொடர்பான இந்த விசாரணை அறிக்கை மென்மையானதாக இருக்கும்எனறு எதிர்பார்க்கக் கூடாது. பால்கன், ஆபிரிக்க மற்றும் 23ஆம் பக்கம் பார்க்க....

## நிதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

**சபாநாயகரிடம் நேற்று கையளிப்பு**

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக சுமார் 100-ற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்ட நம்பிககையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பகல் 12.35 அளவில் பாராளுமன்றில் உள்ள சபாநாயகரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இவ் நம்பிக்கையில்லா பிரேரணை 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நல்லெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INVITATION FOR BID (IFB)

**MINISTRY OF LOCAL GOVERNMENT AND PROVINCIAL COUNCILS**
**ZONAL EDUCATION OFFICE, THUNUKKAI**
**NORTHERN PROVINCIAL COUNCIL**

**Transforming the School Education System as the Foundation of a Knowledge Hub Project (TSEP)**
**Credit No :- 5037-LK**
**Construction of Building**

**1.**The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the **International Development Association (IDA) and Australian Aid** toward the cost of **Transforming the School Education System as the Foundation of a Knowledge Hub Project (TSEP),** and it intends to apply part of the proceeds of this credit to payments for the Construction works listed in the table below.

**2.**The Chairman, **Regional Procurement Committee** on **behalf of the Zonal Education Office, Thunukkai** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works listed in the table below.

**3.**To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for the Grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

**4.**Qualifications requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).

**5.**Interested bidders may obtain further information from the addresses given below in paragraph 6 for respectively and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs

**6.**A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the below mentioned address **from 19-May-2015** until **08-Jun-2015** from 9.00 hrs to 15.00 hrs on working days upon payment of a non - refundable fees of Rs. 2,500.00. The method of payment should be by cash.

School Works Branch, Zonal Education Office, **Thunukkai**
(T.No: **0212060031**, Fax: **0212060030**)

**7.**Bids (original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Zonal Education Office, Thunukkai on or before 13.00 hrs on 9-Jun-2015** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

**8.**Pre bid meeting will be held at the **Zonal Education Office, Thunukkai on 28- May -2015 at 10.00 hrs**

**9.**Bid shall be valid up to **25-Aug-2015**.

**10.**Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

**11.**Each package will be evaluated separately and accordingly substantially responsive lowest evaluated bidder will be selected for award.

| Bid No | Description of Work | Estimated Cost (Rs. In Millions) | Contract Period( Days ) | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Till |
| TSEP/ NP/ DSW/ W/2015/ 17 | Construction of 60x25x1 Lecture Room with Skill Development Unit for the Vocational Training Centre. | 4.69 | 120 | C8 or above (Buildings) | 60000.00 | 22.09.2015 |

**The Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office, Thunukkai**

(C-1004)

# வீணாகான குருபீடம் அங்குரார்ப்பணம் இன்று

வீணாகான குருபீடம் அங்குரார்ப்பண வைபவம் இன்று பி.ப 2 மணிக்கு நல்லூர் நல்லை ஆதீன மண்டபத்தில் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவர் வித்தியாசாகரம் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆதீனகுரு முதல்வர், சின்மயமிஷன் சுவாமிகள், ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள் ஆகியோருடைய ஆசியுடன் இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.நா. வேதநாயகன் ஆகியோருடன் வட மாகாண சபை பிரதிநிதிகள், இந்து கலாசார பிரதிநிதிகள், நீதித்துறை பிரதிநிதிகள், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிக துறையினர் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி வைபவத்திற்கு அபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது. (செ)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால் **சங்கானை கலாசார மத்திய நிலையம் கட்டம்-IV, கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம்-III,** கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01.விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

02.தகைமைகள் பற்றிய் தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

03.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 20.05.2015 தொடக்கம் காலை** 9.00 மணியிலிருந்து மாலை 2.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் **உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** (தொலைபேசி இல.021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4.விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **20.05.2015 முதல் 05.06.2015** வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 08.06.2015 **திகதியன்று பி.ப 2.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **நிர்வாகக் கிளை,** மாவட்டச் செயலகம், **யாழ்ப்பாணம்** அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின்பெயர் மற்றும் கேள்வி இலக் கத்தை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் **08. 06.2015 திகதி பிற்பகல் 3.00 மணிக்கு** திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

06.கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

07.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| Jk/ DCA/ E.C.C- CH/01 | சங்கானை கலாசார மத்திய நிலையம், கட்டம்-IV | 4.07 | 03 மாதம் | C7 | 40,700.00 | 1000/- |
| Jk/DCA/ E.C.C-K/ 01 | கரவெட்டி கலாசார மத்திய நிலையம், கட்டம்-III | 3.5 | 03 மாதம் | C7 | 35,000.00 | 1000/- |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**

(சி-1003)





யாழ். கலாலயா பயிற்சியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மகளிர் விவகார பிரதிஅமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் பரிசில் வழங்குவதையும் பயிற்சியை நிறைவு செய்த மாணவிகள் இயக்குநர் ஆசிரியர்களுடனும் காணப்படுகின்றனர்.

(சி-1007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின்பின் அமையும் பாராளுமன்றின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே!

## அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வுகூறல்

(கொழும்பு)

**அடுத்த பாராளுமன்றத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். மாத்தறை மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொது தேர்தல் மிகவும் முக்கியமானதொன்றாகும். தேர்தலினால் இரு வேறு கட்சிகளுக்கிடையில் போட்டி இடம்பெறும் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

அதாவது நல்லாட்சியையும், திருடர்களின் ஆட்சியையும் அவ்விரு கட்சிகளும் குறித்து நிற்கும்.

நாட்டின் நலனை கருத்திற்கொண்டே ஐக்கிய தேசிய கட்சி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுத்தது.

எங்களது அழைப்பை ஏற்றுக்கொண்டால் நஷ்டவாளிகள் யாரும் இருக்கமாட்டார்கள்.

ஆனால் ஒரு குழுவினர் மாத்திரம் திருடர்களின் ஆட்சியை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அதன் காரணமாகவே அவர்கள் தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

எனது நண்பரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ கோரிக்கைகளை முன்வைத்து எனக்கொரு கடிதம் அனுப்பியிருந்தார்.

அவரை நான் நீதிமன்றத்தில் வைத்து சந்திப்பதை குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் அழித்த சொத்துக்கள் தொடர்பிலான அறிக்கை தயாராகவே உள்ளது.

எனவே முன்னாள் ஜனாதிபதி அனுப்பிய கடிதத்தை நான் ஏற்றுக்கொண்டதுடன், அவரை நீதிமன்றத்தில் சந்திக்கவும் நான் தயாராகவே உள்ளேன்.

ஆனால் புதிய அரசியலமைப்பு அனைத்து இலங்கையர்களும் தமிழ், சிங்களம், முஸ்லிம் எனும் பேதமன்றி ஒரு தாய் மக்களாக வாழ்வதற்கு வழி செய்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசியல் சட்டத்தை பிரகடனப்படுத்த நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அகற்றுவது என்பது சகல அரசியல் தீமைகளுக்குமான தீர்வாக அமையாது.

நாடாளுமன்றத்தை ஒரு அரசியலமைப்பு சபையாக மாற்ற வேண்டும் என்பதனாலேயே புதிய அரசியலமைப்பொன்றை நாம் அறிமுகப்படுத்தினோம்.

தேர்தலின் பின்னர் 5 வருடங்களுக்கான ஒரு தேசிய அரசாங்கமொன்றை அமைக்கவே நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

எந்தக் கட்சி கூடுதலான வாக்குகளைப் பெற்று இருக்கிறதோ அக்கட்சியை சேர்ந்தவருக்கு பிரதமர் பதவியும், இரண்டாவது பெரும்பான்மையை பெற்ற கட்சிக்கு துணை பிரதமர் பதவியையும் வழங்க எண்ணியுள்ளோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக வருவார் என நான் உறுதியாக கூறுகின்றேன் என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# பொதுத் தேர்தலில் தனியாக களமிறங்க பொன்சேகா முடிபு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி தனியாக போட்டியிடுவதற்கு தீர்மானித்து வருவதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் கப்டன் கயான விதானகே தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியில் இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியினை வலுவடைய செய்வதற்கான நடவடிக்கைகள் இநநாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இதற்கமைவாக கட்சி ஆர்வலர்களை விழிப்புணர்வு செய்வதற்காக பல்வேறு கூட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

கட்சித் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களில் விழிப்புணர்வு கூட்டங்கள் இடம் பெற்றுள்ளன. மார்ச் மாத தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டங்கள் இம்மாதம் 13ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனி அரசியல் கட்சியாக போட்டியிடுவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# இலங்கை மீனவர்கள் 16பேர் விடுதலை

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகியிருந்த 16 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு-ஆந்திரா கடலோர பகுதிகளில் மீன்பிடித்த 7 இலங்கை மீனவர்களை கடலோர காவல்படையினர் கடந்த மாதம் 2ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

அதேபோல் கடந்த முதலாம் திகதி தமிழ்நாடு-ஆந்திரா கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்த 9 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 16 இலங்கை மீனவர்களும் சென்னை புழல் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் புழல் சிறையில் உள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்யுமாறு சிறை அதிகாரிகளுக்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதையடுத்து உரிய சான்றிதழ் மற்றும் மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (3-5)

# இராசி பலன்

19.05.2015

(வைகாசி 05, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு

பிரதமை முற்பகல் 8.58 மணிவரை

ரோகினி முன்னிரவு 10.30 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சுபநேரம் 10.22-11.52 மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** வியாபாரம், தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் மாறும், பயணங்களால் பலனுண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர் வருகையால் உற்சாகம் அடையும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீரா[illegible] ஆனந்தப்படுத்தும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்[illegible]ணியாக செயற்படுவர், செ[illegible] தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் ஏற்படும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினி[illegible] சம்பவமொன்று நடைபெறும் புண்ணிய காரியங்களில் ஆர்வ[illegible] காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன கிடைக்கும்.

**மீனம்:** பணப்புழக்கம் இருந்தாலும் திடீ[illegible] விரயங்களும் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்[illegible] உதவிகள் கிடைக்கும் வாய்ப்[illegible]ண்டு, குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 201**

## பொறாமையிலிருந்து விடுதலை!

**...பி**றகு அவர் அவனைத் தனது தோட்டத்தில் ஒரு ரோஜாச் செடியும், ஒரு சைப்ரஸ் செடியும் அருகருகே வளர்ந்திருந்த இடத்திற்குப் போகச் சொன்னார்.

அவர் சொன்னார், அவைகளே உனது ஆசான்; நீ கற்றுக்கொள்ள வேண்டியதை அவை உனக்குக் கற்றுக் கொடுக்கும்.

தோட்டத்திற்குச் சென்ற அரசன் அந்த இரண்டு செடிகளையும் பார்த்தான். அந்தச் செடிகளிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது என்ற என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவன் குருவிடம் திரும்பி வந்து கேட்டான், தாங்கள் என்ன சொல்கிறீர்கள் குருவே? எவ்வாறு அவை எனக்குக் கற்றுத் தர முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. குரு அவனை அந்தச் செடிகளிடம் அழைத்துச் சென்று விளக்கினார். இந்த சைப்ரஸ் செடி ரோஜாச் செடிக்கு அருகில் பல வருடங்களாக இருக்கிறது. அது ஒருபோதும் ரோஜாச் செடியாக விரும்பியது இல்லை. அதேபோல் ரோஜாச் செடியும் ஒருபோதும் சைப்ரஸ் செடியாக விரும்பியது இல்லை. அவைகள் தினமும் வெறுமனே தங்களது கடமைகளான வளர்தலையும் மலர்தலையும் செவ்வனே செய்து கொண்டு, மக்களின் கவனத்தைக் கவருகின்றன. மனிதன் சைப்ரஸ் கவரும் ரோஜாச் செடியின் மீது



செடியாக இருந்திருந்தால், தன்னை பொறாமை கொண்டிருப்பான். ரோஜாச் செடியுடன் ஒப்பிட்டுக் அல்லது ஒருவேளை ரோஜாச் செடியாக இருந்திருந்தால், பொறாமையுடன் சைப்ரஸ் செடியைப் பார்த்து, தினமும் மக்களால் பறிக்கப்படும் அவஸ்தைகள் இல்லாதல் அது எவ்வளவு அமைதியாக இருக்கிறது என்று எண்ணியிருப்பான். குரு சொன்னார். இதுவே நீ அடையக் கூடிய மிகவும் ஆற்றல் வாய்ந்த மந்திர சக்தி!

பாருங்கள், இரண்டு செடிகளும் செழுமையாக வளர்ந்ததற்குக் காரணம், அவை தங்கள் எல்லாச் சக்தியையும் தங்கள் சொந்த வளர்ச்சிக்காக உபயோகித்ததுதான். ஒரு அணுவளவு சக்திகூட மற்றவற்றின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்வதற்காக விரையமாக்கப்படவில்லை. அவற்றின் 100 சதவிகித சக்தியும் அவற்றின் வளர்ச்சிக்கே உபயோகப்படுத்தப்பட்டது.

அதேபோல, உங்களுடைய எல்லாச் சக்தியையும் உங்களுடனேயே பந்தயத்தில் ஓடவும் உங்களுடனேயே போட்டியிடவும் செலவழித்தீர்களானால் உங்களுடைய முன்னேற்றம் அபரிமிதமாக இருக்கும். (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### உலக சாதனை நிகழ்த்திய சுவிஸ்

சுவிட்சர்லாந்து ஏல நிறுவனம் ஒன்றில் 'புறாவின் ரத்தம்' என்று அழைக்கப்படும் விலையுயர்ந்த மாணிக்க கல் ஒன்று இதுவரை இல்லாத விலையில் ஏலம் விடப்பட்டு உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் உள்ள Sotheby's என்ற நிறுவனத்தில் உலக நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட விலையுயர்ந்த ஆபரணங்கள் கடந்த செவ்வாய் கிழமை ஏலத்தில் விடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் 'புறாவின் ரத்தம்' என்று அழைக்கப்படும் 25.59 காரட் கொண்ட மாணிக்க கல்லை 30.33 (3 கோடியே 33 லட்சம்) மில்லியன் டொலருக்கு பெயர் வெளியிடப்படாத நபர் ஒருவர் வாங்கியுள்ளார்.

இந்த வரலாற்று சாதனை குறித்து பேசிய Sotheby's நிறுவன தலைவரான David Bennett கடந்த 40 ஆண்டுகால வரலாற்றில் 'புறாவின் ரத்த' நிறத்தில், மிகப்பெரிய அளவில் இது போன்ற ஒரு பிரமிக்க வைக்கும் மாணிக்க கல்லைப் பார்த்ததே இல்லை என்றார்.




மேலும், மாவீரன் நெப்போலியனின் மருமகளான இளவரசி Mathilde வைத்திருந்ததாக கூறப்படும் பிங்க் நிற வைரம் ஒன்று 15.9 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த வைரமும் அதிக விலைக்கு விற்பனையாகியுள்ளதாக Sotheby's நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தவிர, மியான்மரில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள Sunrise என்ற மாணிக்கம் 12 மில்லியன் முதல் 18 மில்லியன் டொலருக்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சமைப்போம் சுவைப்போம்

## பன்னீர் பஜ்ஜி



**தே.பொருட்கள்:**

பன்னீர் - 200 கிராம்

(சிறிதாக நறுக்கியது)

கடலை மாவு - 1 கப்

அரிசி மாவு - 2 டேபிள் ஸ்பூன்

இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1%2 டீஸ்பூன், மிளகாய் தூள் - 1 டீஸ்பூன், பேக்கிங் சோடா - 1%4 டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

முதலில் பன்னீரை வேண்டிய வடிவில் வெட்டிக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தில் கடலை மா, அரிசி மா, இஞ்சி பூண்டு பேஸ்ட், மிளகாய் தூள், பேக்கிங் சோடா மற்றும் உப்பு சேர்த்து, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, பஜ்ஜி மாவு பதத்திற்கு கரைத்துக் கொள்ள வேண்டும்.

பின் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், நறுக்கிய பன்னீர் துண்டுகளை கடலை மாக் கலவையில் நனைத்து, எண்ணெயில் போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக முடியாது



## அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் சட்டங்களுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாக முடியாது என உள்ளக போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.**

செவனகல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அன்று தோற்கடிக்க முடியாது என வர்ணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவை, கிராமத்திலிருந்து வந்த மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடித்துள்ளது. இந்த நாட்டின் மாமன்னரை தோற்கடிக்க முடியாது என மேடைகளில் கோசம் எழுப்பியவர்களின் வாய்கள் மூடப்பட்டுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 15 இலட்சம வாக்கு வித்தியாசத்தில் தேல்வியைத் தழுவுவார்கள் என்பது உறுதி. தற்போது அறுபது வயதைத் தாண்டிய மகிந்த பூக்கூடைகளை ஏந்தி விகாரைகளுக்கு சென்று வருகின்றார்.

அதனைத் தவிர நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டின் ஜனாதிபதியாக முடியாது.எனவே, விஹாரைக்குச் சென்று புண்ணி யம் தேடிக் கொள்வது நல்லதே என அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். (3-5)

# யாரை கைது செய்கிறார்கள் என்பதே எமது முழுக் கவனமுமாக உள்ளது

## விதுர விக்கிரமநாயக்க கவலை



(கொழும்பு)

நாம் நேராகச் செல்லாது பிள்ளைகளை நேராகச் செல்ல உத்தரவிடுகின்றோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலம் முழுவதிலும் யார் எந்தப் பக்கம் தாவினார்கள் என்பதனையே காலை முதல் அவதானித்து வந்தோம்.

காலை முதல் இரவு வரையில் எத்தனை பேர் கட்சி தாவியுள்ளார்கள் என்பதே கடந்த காலங்களில் எங்களது கவனமாக இருந்தது.

தற்போது நேற்றிரவு யாரை கைது செய்தார்கள் என்பதனை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்து இரவில் யார் கைது செய்யப்பட்டார் என்பதனை அறிந்து கொள்ள முயற்சிக்கின்றோம். மறுபுறத்தில் பழிவாங்குதல் கூடாது என கூறுகின்றோம். இவ்வாறான நடவடிக்கைகள் நல்லாட்சியாகாது.

எமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் இளம் தலைமுறையினர் உன்னிப்பாக அவதானித்து வருகின்றார்கள். எங்களை விடவும் அவர்கள் இது குறித்து அவதானத்துடன் இருக்கின்றார்கள்.

நம் அனைவருக்கும் ஒழுக்கமும் பொது சட்டமொன்றும் இருக்க வேண்டும்.

நாம் நேராக நடக்காது பிள்ளைகளை நேராக நடந்து செல்லுமாறு பணிப்பதில் பயனில்லை என விதுரவிக்கிரமநாயக்க அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப் பொன்றின் போது தெரிவித்துள்ளார்.(3-5)

# ஜுலை 2 வரை அணியலாம்

முகத்தை முழுமையாக மூடும் தலைக் கவசம் அணிய விதிக்கப்பட்ட உத்தரவிற்கு நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு நீக்கத்தை நீடித்துள்ளது.

இதன்படி குறித்த தடை உத்தரவு ஜுலை 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பில் எதிர்ப்பு தெரிவிக்க கால அவகாசம் தேவை என அரச சட்டத்தரணிகள் கோரியுள்ளனர். இந்நிலையிலேயே வழக்கு எதிர்வரும் ஜுலை மாதம் 2 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசம் அணிய விதிக்கப்பட்ட தடை உத்தரவிற்கு எதிராக மூவர் வழக்கு தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-5)


## தேவை

இணுவிலில் இயங்கும் அரைக்கும் ஆலைஒன்றிற்கு அனுபவம்உள்ள வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 472 3121,077 648 2617

## தேவை

கப்பலில், விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? ஆண்/ பெண் இருபாலாருக்கும் உயர்ந்த சம்பளத்துடன் உடனடி வேலை. 35000 (பின்னர் வெளிநாட்டு துறைமுகம்/ விமான நிலையங்களில் வேலை)

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:-
071 647 6000

## தேவை

எட்னா சொக்லட், கொக்கக்கோலா, மலிபன், அங்கர், எலிபன், சொக் ஐஸ்கிறீம், தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் 60 பேர் தேவை. உற்பத்தி/ பொதியிடல்/ லேபர் பிரிவுகளுக்கு உதவியாளர்கள் தேவை. மாதச் சம்பளம்:- 35000

இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்: 075 921 9223

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 48<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:சொந்தத் தொழில்<br>தொ.இ: B/4515 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 34.5 செவ் 12 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: IT, BIT<br>தொ.இ: G/4534 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 48 செவ் 12இல்.<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: Dip.in Teaching ஆசிரியர்<br>தொ.இ: B/4516 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 8.25<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: கணக்காளர் நியூசிலாந்து<br>தொ.இ: G/4536 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: புரம்<br>கி.பா: 21.5<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: BA, ஆசிரியர்<br>தொ.இ: B/4517 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 36<br>உயரம்: 4’5"<br>தகைமை/தொழில்: O/L தனியார் தொழில்<br>தொ.இ: G/4537 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 41 செவ். 8 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/4518 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 60<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BA, ஆசிரியர்<br>தொ.இ: G/4541 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## தென் இந்திய திருத்தல யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை.
நாட்கள்:- 16, ஆரம்பம்:- 20.06.15, யாத்திரிகர்:-10, நிறைவு: 06.07.2015

தரிசிக்கும் ஆலயங்கள் (சுருக்கமாக) திருச்சி உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, நவக்கிரக ஆலயங்கள், குருவாயூர், கன்னியாக்குமரி, மைசூர், சாமுண்டீஸ்வரி, திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சபூதஸ்தலங்கள் 5 இன்னும் பல சிவ ஆலயங்களும், பொற்கோவில், ஆஞ்சநேயர் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள் உட்பட 70 இற்குக் குறையாத ஆலயங்களைப் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (தவறாது)

இரு வழி விமான ரிக்கற், கொழும்பில் இருந்து விமான நிலையம் செல்லவும் திரும்பவும் வாகன வசதி, யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, மூன்று வேளை உயர்தர சைவ உணவு, கோப்பி/ ரீ, குடிநீர், இரண்டு பேருக்கு கட்டில், மெத்தை மற்றும் குளியலறை இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள். ஆலய தரிசன கட்டணங்களும் இவற்றுடன் அடங்கும். விபரம் கேட்டறிந்து பதிவு செய்க.

**விபரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீரெங்கநாதன்,
59,3/6, செட்டியார் தெரு,
கொழும்பு- 11
T.P: 077 768 0102**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு மாணவி படுகொலை நாளை புதன்கிழமை பகிஷ்கரிப்பு

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி சிவலோகநாதன் வித்யா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையைக் கண்டித் தும், குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங் கக் கோரியும் வடமாகாணம் முழுவதும் பகிஷ கரிப்பில் ஈடுபடுமாறு இலங்கைத் தமிழர் ஆசி ரியர் சங்கம் அறை கூவல் விடுத்துள்ளது.**

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடகச் செய்தி யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

காலம் காலமாக எமது உற வுகள் வன்புணர்வுக்குட்படுவதும், கொல்லப்படுவதும் சர்வசாதாரண மான விடயமாகி விட்டதோடு குற்ற வாளிகள் இதுவரை தண்டிக்கப் படவும் இல்லை. கொடுமைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை வடமாகாணத்தில் உள்ள அத்தனை அரச, அரசசார்பற்ற ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப் பில் ஈடுபடுவதோடு வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ள அமைதி ஒன்றுகூடலில் மத குருமார், கல்வியாளர்கள், ஊடக வியலாளர்கள், பல்கலைக்கழக ஆசிரி யர்கள், மாணவர்கள், ஆசிரிய கலாசாலை, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவ ர்கள், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப் பினர்கள், மாகாணசபை உறுப்பி னர்கள், பிரதேசசபை உறுப்பினர் கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், வர்த் தகப்பெருமக்கள், இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் என அனை வரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தெரி விக்கப்பட்டுள்ளது.

அன்றைய நாளை துக்கம் தோய் ந்த நாளாக பிரகடனப்படுத்துமாறும் வடமாகாண முதலமைச்சரிடம் இல ங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கோரி க்கை முன்வைத்துள்ளது. (3-5)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் 2015 எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடை பெறவுள்ளது.

இதில் தினமும் காலை திருவிழா 9 மணிக்கும் மாலைத்திருவிழா 6 மணிக்கும் ஆரம்பமாகும். (3-7)

## நிர்வாகசபை தெரிவு

(கரணவாய்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட் டுறவுச் சங்கத்தின் கரவெட்டி பிராந் திய சபைத் தெரிவு கடந்த 16 திகதி சனிக்கிழமை தலைவர் செ.இலகு நாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவர் க.கந்தையா, செயலாளர் த.உஷா, பொருளாளர் அ.ரஞ்சனாமதி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். (3-7-60)

# புங்குடுதீவு மாணவி படுகொலை; தொடரும் கண்டனப் போராட்டம்




புங்குடுதீவில் பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்டதை கண்டி த்து யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்றுக்காலை கண்டன போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பாட சாலை முன்றலில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் மாணவியின் கொலைக்கு காரணமானவர்கள் உட னடியாக தண்டிக்கப்பட வேண்டும். பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத் தப்பட வேண்டும் என்ற கோசங் களை எழுப்பியிருந்தனர். ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த கண்டனபோரா ட்டத்தில் பாடசாலைமாணவிகள், ஆசிரி யர்கள் கலந்து கொண்டனர். (3-9)

# பெய்துவரும் தொடர் மழையினால் மரக்கறிச் செய்கையில் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் தொடர் மழை காரணமாக மரக்கறிச் செய் கையில் பாரிய அழிவு ஏற்பட்டுள்ள தாக யாழ்.மாவட்ட பிரதி மாகாண விவ சாய பணிப்பாளர் கீ.சிறிபால சுந் தரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் அதிகளவான மக்கள் விவசாயத்தை வாழ்வாதா ரமாக கொண்டு வாழ்கின்றார்கள்.

இந்தநிலையில் கடந்த சில தினங் களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக வயல்நிலங்களில் பயிரி டப்பட்ட மரக்கறி செய்கையில் பாரிய அழிவு ஏற்பட்டுள்ளது. வெங்காயம், கரட், பீற்றூட், தக் காளி, கத்தரி போன்றமரக்கறிவகைகளும் எள்ளு, கௌப்பி போன்ற பருப்பு வகைப் பயிர்களும் அழிவ டைந் துள்ளன.

குறிப்பாக சிறுப்பிட்டி, நீர்வேலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், கெரு டாவில், சங்கானை, சுழிபுரம், பண்டத் தரிப்பு, மட்டுவில், வட்டுக்கோட்டை, உடுவில், மாதகல், கோப்பாய், தென் மராட்சி ஆகிய பகுதிகளில் மரக்க றிப்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இன்னும் சில நாட்களில் கோவில் திருவிழாக்கள் ஆரம்பிக்க இருப்ப தால் மரக்கறி விலையில் அதிகரி ப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவ சாயிகள் இந்த தொடர் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (3-9)

# உணவு தொண்டையில் சிக்கி தாயொருவர் உயிரிழப்பு

(கரணவாய்)

துன்னாலை அல்லையம்படி பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் உணவு தொண்டையில் சிக்குண்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

38 வயதுடைய சுதர்சன் ஜெகதா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் மதியம் உணவு அருந்திக் கொண்டிருந்த வேளை விக்கல் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தி யசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நெல்லியடி பொலிஸாரினால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (3-7-60)

# ஒரு வார காலத்திற்குள் 172.6மி.மீ. மழைவீழ்ச்சி

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்திற்ள் 172.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள் ளதாக யாழ்.மாவட்ட வானிலை அவ தானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரீ.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு மேல்வடதுருவத்தில் இருந்தும் தென்துருவத்தில் இருந் தும் வரும் காற்றுக்கள் சந்திக்கும் போது ஏற்படும் இடை அயன ஒடுங் கல் வலயம் காணப்படுவதால் இந்த காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது தற் போது இடை அயன ஒடுங்கல் வல யம் இலங்கையை கடந்துள்ளது.

இன்னும் ஓரிரு நாட்களில் தென் மேல் பருவக்காற்று காலநிலை ஆரம் பமாக் இருப்பதால் சில நாட்களில் இக்காலநிலை மாற்றமடையும்.

இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று முன்தினம் முற்ப கல் 11.30 மணி வரைக்கும் 293.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் முழு வதும் 80.5மில்லிமீற்றர் மழை வீழ் ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் இக்காலப்பகுதியில் கடந்த ஆண்டை விட கூடுதலாக மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-9)

# புங்குடுதீவு மாணவி படுகொலை நாளை இளைஞர்கள் பேரணி

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவியை வன்புணர்வுக்கு உட் படுத்தி படுகொலை செய்தமையை கண்டித்து மாபெரும் இளைஞர் பேரணி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் நூலகத் திற்கு முன்பாக நடத்துவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தால் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இந்த கண்டன பேர ணியில் தேசிய இளைஞர் சேவை கள மன்ற அனைத்து உத்தியோ கத்தர்கள், யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து இளைஞர் கழக உறுப்பினர்கள், பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாகத்தினர் மாவட்டத்தின் அனைத்து இளை ஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பெண்கள் அமைப்புக்க ளும் பங்கெடுக்க உள்ளன.

யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இந்த கண்டன பேர ணிக்கு பெண்கள் சார் செயற்பாட்டு வலையமைப்பு, யாழ்.மாவட்ட பெண்கள் சமாசம், தேவை நாடும் மகளிர் அமைப்பு, மகளிர் அபிவிரு த்தி நிலையம் என்பவை தமது ஆதரவை வழங்கவுள்ளதாக அறி வித்துள்ளனர்.

இப் போராட்டத்தில் பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், இளை ஞர் யுவதிகள் உள்ளிட்ட அனைவ ரையும் கலந்து ஆதரவளிக்குமாறு யாழ் மாவட்ட இளைஞர் கழக சம் மேளனத்தினர் கேட்டுள்ளனர். (3-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அச்சாறு அரசாங்கம்' மக்களுக்கு நன்மை செய்தது

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தமது பைகளையும் வயிறையும் நிரப்பியது என்று புதிய அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வலப்பனையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர்,

தற்போதைய அரசாங்கத்தை சிலர், அச்சாறு அரசாங்கம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்கிறோம். அச்சாறு அரசாங்கம், மகிந்த ராஜபக்ஷ 5 வருடங்களாக செய்ய முடியாதவற்றை செய்து முடித்துள்ளது.

அரசாங்கத்தினால் இந்த 100 நாட்களில் மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த கடன் சுமைகளை குறைக்கும் வகையில் வாழ்க்கை செலவை குறைக்க முடிந்துள்ளது.

தாம் முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுவதில்லை என்ற மகிந்த ராஜபக்ஷவின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, மகிந்தவினால் அமைக்கப்பட்ட புதிய பாதைகளில் சாதாரண மக்களுக்கு பிரயோசனம் இருக்கவில்லை.

எனினும் புதிய அரசாங்கத்தினால் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்ட பின்னர், அந்தப் பாதைகளில் மக்கள் பயணிக்கக்கூடியதாகவுள்ளது.

அச்சாறு அரசாங்கம், மக்களின் பைகளையும் வயிறையும் நிரப்பியுள்ளது. எனினும் மகிந்தவின் அரசாங்கம், தமது பைகளையும் வயிறையும் நிரப்பியது என்று ரணில் தெரிவித்துள்ளார். (3-5



# அரசின் நல்லெண்ணத்தை மதிக்கின்றோம் எனினும் போராட்டங்கள் தொடரும்

### உலகத்தமிழர் பேரவைத்தலைவர் எஸ்.ஜே.இமானுவேல் அடிகளார்

(கொழும்பு)

**இலங்கையில் போர் முடிந்து 6 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்துடன் தொடர்புகளை பேணத் தயாராக இருப்பதாக உலகத்தமிழர்பேரவையின்தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே. இமானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தி வருவதாகவும் அருட்தந்தை இமானுவேல் பிபிசி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துளளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் தமிழ் மக்களுக்கு கொடூரமானதாக இருந்ததாகவும் தற்போதைய அரசாங்கத்தின ஆட்சி தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கின்றது.

புதிய அரசாங்கம் வெளிப்படுத்துகின்ற நல்லெண்ண சமிக்ஞைகளுக்கு புலம்பெயர் தமிழர் தரப்பு மதிப்பளிக்க வேண்டும்

"மற்றவர்களின் நல்லெண்ண நடவடிக்கைகளை மதிக்காமல் தொடர்ந்தும் நாங்கள் குற்றம் சாட்டிக்கொண்டிருக்க முடியாது"

இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பகமான உள்ளக விசாரணை நடத்துவதாக அளித்துள்ள உறுதி மொழிக்காக இலங்கை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்.

இலங்கை தொடர்பான ஜெனீவா விசாரணை அறிக்கை வரும் செப்டெம்பரில் வெளியாக இருக்கின்ற சூழ்நிலையில், அந்த அறிக்கையை முக்கிய வரலாற்று ஆவணமாகக் கருதி அடுத்த கட்டப் போராட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கக் காலத்தில் பல்வேறு புலம்பெயர் தமிழர் அமைப்புகளைச சேர்ந்த பிரமுகர்களை தடை செய்வதாக அறிவித்து இலங்கை பட்டியல ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்தப் பட்டியலில் அருட்தந்தை இமானுவேல் உள்ளிட்ட உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்தவர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-5)

# சு.கட்சியை பிளவுபடுத்தும் பாவச்செயலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஈடுபடக்கூடாது

### அமைச்சர் ஜீவன்குமாரதுங்க கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம், தொழில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கோரியுள்ளார்.

அரசியல்வாதிகள் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். கட்சியை இரண்டாக பிளவடையச்செய்யும் பாவச்செயலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த பங்கேற்கக் கூடாது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் முன்னாள் ஜனாதிபதியை ஆட்சியிலிருந்து வெளியேற்ற தீர்மானிததனர். நாம் கட்சிக்காக பல்வேறு அர்ப்பணிப்புக்களை செய்துள்ளோம். எனினும் முன்னாள் ஜனாதிபதி



மகிந்த ராஜபக்ஷ எம்மை அழைத்து எந்த நேரத்திலும் எவரும் வெளியேற செல்ல முடியும், இது சலூன் கதவு என தெரிவித்திருந்தார்.

இவ்வாறு எங்களை அவமரியாதை செய்ய வேண்டாம் என நாம் கூறியிருந்தோம். இவ்வாறான காரணிகளினால் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியடைந்தனர்.

கட்சியை பிளவுபடுத்த மகிந்த முயற்சிக்கக் கூடாது. மகிந்தவை நாம் நிராகரிக்கவில்லை. எனினும பதவிகளுக்கு அதிகம் ஆசைப்பட வேண்டாம் என கூறுகின்றோம். மகிந்த ராஜபக்ஷ இன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்னோக்கி செல்ல முடியாது எனக் கூறினால் அது மிகப் பெரிய நகைச் சுவையாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பயணத்தில் எத்தனை தலைவர்கள் மாறியிருக்கின்றார்கள் என அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார். மொரட்டுவையில்நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (3-5)

# புத்தளத்தில் வாகன விபத்து இராணுவ வீரர் உயிரிழப்பு

புத்தளம் -அநுராதபுரம் வீதியின் 16ஆம் கட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சாலியவெவ பொலிஸார தெரிவித்தனர். கொட்டுககச்சி எத்துன் கொட பிரதேசத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நிசாந்த லக்மால் (வயது- 25) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரத்திலிருந்து புத்தளம் நோக்கி சென்றுகொண்டிருந்த கப்ரக வாகனமும் இராணுவ வீரர் செலுத்திச் சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியுமே நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நேருக்குநேர் மோதியது. நொச்சியாகம ஹெலபேவ பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் பணியாற்றி வருகின்ற இந்த வீரர், கொட்டுக்கச்சி பிரதேசத்திலுள்ள தனது வீட்டிலிருந்து தான் பணியாற்றும் முகாமுக்கு முச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த போதே விபத்துக்குள்ளானார் என்று பொலிஸார் கூறினர். இந்த விபத்தில் படுகாயமடைந்த இராணுவ வீரர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே அங்கு உயிரிழந்துள்ளார். இந்த விபத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் கப்ரக வாகன சாரதியை கைது செயதுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இந்த விபத்து தொடர்பில் சாலியவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (3-5)

# பயங்கரவாதிகளை நினைவுகூருதல்-தேசத்துரோகம் உறவினர்களை நினைவுகூருதல்- மனித உரிமை

### அமைச்சர் சம்பிக்க விளக்கம்

பயங்கரவாதிகளுக்கான நினைவு நிகழ்வுகள் தேசத்துரோக செயலாகும், அதே நேரம் உயிரிழந்தவர்களுககு அஞ்சலி செலுத்துவது உறவினர்களது உரிமையாகும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எனினும் பயங்கரவாதிகளுக்கான நினைவு நிகழ்வுகளை நடத்துவது வன்முறையானதும், தேசத்துரோகமானதுமான செயலாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுபடுத்தி நடத்தப்படவிருந்த நிகழ்வுகள் குறித்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூர்ந்து நடத்தப்படவிருந்த நிகழ்வுகள் நீதிமன்றினால் தடை செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. இதேவேளை வடக்கு மாகாண சபையினால் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் முல்லைத்தீவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (3-5)


## பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி.கந்தசாமி சரஸ்வதி**

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சரஸ்வதி கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப10-ந.ப12மணிவரை Chapel Ridge Funerel home, 8911, woodbine Ave, markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னா பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**கந்தையா தேவகாந்தன்**

யாழ்ப்பாணம் Brown Road ஐ பிறப்பிடமாகவும் ஐக்கிய அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தேவகாந்தன் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப10-பி.ப.1மணிவரை Desmond Funeral Home, 2600 Crooks Rd, Troy, Michigan 48084, United States என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு மாணவி படுகொலை

# வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி. மாணவர்கள் கண்டனப் போராட்டம்





புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா கோரமான கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டதனைக் கண்டித்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து நேற்றுக்காலை ஒரு மணி நேர கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி யாலயம் முன்பாக ஒன்றுகூடிய மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு நேற்றுக் காலை 10 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள்

" அரசாங்கமே மாணவ சமூகத்திற்கு பாதுகாப்பை தா, குற்றவாளிகளை விரைவாக கண்டுபிடி, பெண்களுக்கு சுதந்திரம் இல்லையா, குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கு, நீதித்துறையே மாணவிகளுக்கு பாதுகாப்பு தா, நேற்று கிருசாந்தி இன்று வித்தியா நாளை யாரோ....?

மன்னிப்பை மறு, தண்டனையை கொடு, சமூகமே பெண்களை மதி, இன்னுமொரு சகோதரியை இழக்க நாம் தயாரில்லை"

ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இது போன்று வடக்கில் பல பாகங்களிலும் கண்டனப் போராட்டம் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## புதுமுறிப்புக்குளம் 5.84மில்.ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட 5.84 மில்லியன் ரூபா நன்கொடை நிதியிலிருந்து புதுமுறிப்புக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதனூடாக சிதைவடைந்திருந்த மண் வாய்க்கால் தற்போது சீரான கொங்கிறீற் வாய்க்காலாக மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் 850 ஏக்கர் விஸ்தீரணத்திற் கான விரயமற்ற நீர் விநியோகம் உறுதிப் படுத்தப்பட் டுள்ளது. இதனால் 385 விவசாயக் குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளனர். (2)




# பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் அடிப்படை வசதிகளின்றி வாழ்கின்றோம்

## ஆனந்தபுரம் கிராமத்தில் குடியேற்றப்பட்ட மக்கள் ஆதங்கம்

வவுனியா சமளங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் கிராமத்தில் குடியேற்றப்பட்ட 55 குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் இது வரை வழங்கப்படவில்லையென அவர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். இம்மக்கள் குடியேற்றப்பட்டு சுமார் 10 வருடங்கள் கட ந்துள்ள நிலையிலும் அடிப்படை வசதிகளி ன்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்ற னர். இது தொடர்பில் தெரியவருவதாவது, வட பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றிருந்ததுடன் நூற் றுக்கணக்கானோர் இந்தியாவிற்கும் சென்றிருந்தனர்.

இவ்வாறு இந்தியாவிற்கு சென்றவர்கள் மண்டும் 1990 ஆம் ஆண்டுகளில் தமது தாய் நாட்டிக்கு செல்லும் ஆவலுடன் இலங்கைக்கு வந்த நிலையில் வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.


இந்தியாவில் இருந்து வந்தவர்களில் சுமார் 30 குடும்பத்தினருடன் சேர்த்து 55 குடும்பத்தினர் அதிகாரிகளின் பல்வேறு வாக்குறுதிகளின் அடிப்படையில் வவுனியா சமளங்குளம் கிராம சேவகர் பிரிவில் ஆனந்தபுரம் கிராமத்தில் குடியேற்றப்பட்டனர்.

இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் தற்போது சுமார் 10 வருடங்கள் கடந்த நிலையில் எவ் வித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

55 குடும்பங்கள் வசித்து வரும் ஆனந்தபுரம் கிராமத்தில் 30 குடும்பங்கள் இந்தியாவில் இருந்து இலங்கை வந்து குடியேற்றப்பட்டவர்களாயினும் இதுவரை அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

மண் வீடுகளில் வசிக்கும் இம் மக்கள் மழை காலங்களில்சுவர் இடிந்து வீழ்வதும்மழை காலம் முடிவுற்ற பின்னர் மீண்டும் சுவர் அமைபபதுமாக இவர்கள் வாழ்வு செல்கையில் நீர் வசதிகளோ மலசலகூட வசதிகளோ மற்றும் வீதி வசதிகளோ இன்றி இன்றும் வாழ்வது தொடர்பில் எவரும் அக்கறை கொள்ளவில்லை என்பது இம் மக்க ளின ஆதங்கமாகும். (2-250)







இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூரும் வகையில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன், கரைச்சி பிரதேச சபை உப-தலைவர் வை.நகுலேஸ்வரன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(படங்கள்:-கிளிநொச்சி, கிளிநொச்சி செய்தியாளர்கள்)

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(வவுனியா)

வவுனியா மாவட்டம் இந்து அற நெறிப் பாடசாலைகளின் பேரவையின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தில் இயங்கிவரும் அற நெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயல மர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை வவுனியா பிரதேச செயலக மகா நாட்டு மண்டபத்தில் நடத்தப்படும்.

இச்செயலமர்வில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் பவானந்தன், திருமதி. எல். துணைவன், திரு மதி.ஆர். அருந்ததி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் கே.எஸ்.ரமேஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் செயலமர்வுக்கு அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பேரவை செயலாளர் க.ஆனந்த கணேஸ் அறிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்திநகரிலிருந்து திருநகருக்கு செல்வதற்கு திரும்பும் சந்தியில் விபத்துக்கள் அதிகரிப்பு

## வீதியை செப்பனிடுவதன் மூலம் விபத்துக்களை தடுக்கலாம்-பொதுமக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயந்தி நகரிலிருந்து திருநகர் ஊடாக கிளிநொச்சியை சென்றடையும் சுமார் 2கிலோமீற்றர் வீதியானது பயணிக்கமுடியாதவாறு குன்றும் குழியுமாக காணப்படுவதாக பொதுமக்கள், வாகன சாரதிகள் ஆகியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியானது ஜெயந்திநகர் கிளி/இந்துக்கல்லூரியிலிருந்து திருநகர் கிராமம் ஆரம்பிக்கும் இடமாக காணப்படுகின்றது.

ஜெயந்திநகரில் இருந்து திருநகருக்கு செல்வதற்கான திரும்பும் சந்தியில் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி நின்று மறுபக்க வீதியையும் அரித்து பள்ளமாக்கியுள்ளது.

மழைகாலங்களில் அந்த வீதியில் உள்ள பெரிய பள்ளங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மாணவர்கள், பொதுமக்கள் துவிச்சக்கரவண்டியிலோ அல்லது நடந்தோ பாடசாலைகளுக்கும் வேறு தேவைகளுக்கும் செல்ல முடியாதுள்ளது.

ஏனெனில் வெள்ளநீர் அவர்களது உடைகளை அழுக்காக்கி விடுகின்றது.

நேற்றையதினம் அவ்வழியாக பயணித்த பேருந்தொன்று வெள்ளநீரை அவ்வீழியாக சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது அடித்துவிட்டு சென்றதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.



அத்துடன் வீதியின் பிரதான திரும்பும் சந்தியாகையால் கனரக வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் ஆகியவற்றில் செல்லும் வேளையில் பாதசாரிகள், மாணவர்கள் இந்தத் திரும்பும் சந்தியில் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர்.

பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தற்போது குறித்த வீதியை பிரதான வீதியாக போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான இந்த வீதியில் நீர் வழிந்தோடக்கூடிய வடிகான்களை அமைப்பதன் மூலம் வீதியை ஓரளவு பாதுகாக்க முடியும்.

அதேவேளை விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் பல உழவு இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில் அவர்களும் குறித்த வீதியைப் பயன்படுத்தும் நிலையில் சமூக நலன் கருதி உழவு இயந்திரத்தின் உதவியுடன் சிறிதளவு மண்ணை போட்டு நிரப்பி போக்குவரத்தை இலகுவாக்க உதவலாம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வீதி விபத்துக்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க குறித்த வீதியை செப்பனிட்டுத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

# பெய்துவரும் மழையையடுத்து இருகுளங்கள் வான் பாய்கின்றன

(முல்லைத்தீவு)

தற்போது பெய்துவரும் தொடர் மழை காரணமாக முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இரு குளங்கள் வான் பாய்கின்றன.

புத்துவெட்டுவானின் மருதங்குளம், மற்றும் பழைய முறிகண்டிக்குளம் ஆகிய இரு குளங்களும் வான் பாய்கின்றன.

மருதங்குளத்தில் வான் பாய்வதன் காரணமாக கிளிநொச்சியின் இரண்டாவது பெரியகுளமான அக்கராயன்குளத்தின் நீர்மட்டத்தின் அளவு அதிகரித்து வருகின்றது.

பழைய முறிகண்டிக்குளம் வான் பாய்வதன் காரணமாக துணுக்காயின் அம்பலப் பெருமாள் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் வான்பாய்வதற்கான நீர்மட்டத்தினையடைந்து வருகின்றது.

மழை தொடர்ந்து பெய்வதன் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பல குளங்கள் வான்பாய்வதற்கான நீர்மட்டத்தினையடைந்துள்ளனஎன தெரிவிக்கப்படுகின்றது. (2)






பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தவிசாளருமான முருகேசு சந்திரகுமாரின் மக்கள் நோக்கிய பாராளுமன்ற உரைகளின் தொகுப்பான உரிமைக்கும் உயர்வுக்கும் எனும் நூல் வெளியீடு கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற போது....

(படம்:-சிவநகர் செய்தியாளர்)

# உளசமூக செயலமர்வு

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் இயங்கும் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் அனுசரணையில், வட்டக்கச்சி இராணுவ முகாம், சிவில் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றும் 60 பேருக்கான உளசமூக செயலமர்வு வட்டக்கச்சி இராணுவ சிவில் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில், கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர் இ.செந்தூரன், மாவட்ட உளவள அதிகாரி தே.துஸ்யந்தன், சட்ட உதவி ஆணைக்குழு உத்தியோகத்தர் சட்டத்தரணி எஸ்.பிரசாந்தன் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது, குடும்பம் ஒன்றின் தேவைகள், நலன்கள், குடும்பத்திலுள்ளவர்களின் போஷாக்கை எவ்வாறு பேணுதல், அதிலும் குறிப்பாக பெண்களின் போஷாக்கை எவ்வாறு பேணுதல், சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை எவ்வாறு பாதுகாத்தல், அவர்களுக்கான உரிமைகளை நிலைநாட்டுதல், மனிதவுரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை மனித நலனுக்காக எவ்வாறு பயன்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விளக்க மளிக்கப்பட்டது. (2)

# மாணவர்களுக்கு மாலைநேர கல்வி வழங்கும் செயற்றிட்டம்

## ஆரம்பித்து வைத்தார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் மாணவர்களுக்கான மாலை நேரக்கல்வி வழங்கும் செயற்றிட்டமானது கடந்த வாரம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

உலகத்தமிழ் மக்கள் மறுவாழ்வு உரிமைகள் ஆணையத்தின் கல்வி வளர்ச்சிப்பிரிவினர் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் ஊடாக மேற்படி செயற்றிட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

அந்த வகையில் முல்லைத்தீவு உப்புமாவெளி, தூண்டாய் வடக்கு கிராமத்திலும் கருநாட்டுக்கேணி கிராமத்திலும் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட தேறாங்கண்டல் பகுதியிலுமாக இம்மாலை நேரக்கல்விச் செயன்முறையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தேறாங்கண்டல் கிராமத்தில் அண்மையில் இலவசக்கல்வி செயற்பாட்டை அரும்புகள் மூலம் ஆரம்பித்து வைத்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் இந்நிகழ்வில் உரையாற்றுகையில்,

மிகவும் பின்தங்கிய கிராமங்களில் வறுமைக கோட்டிற்குட்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊககுவிக்கவும் அவர்களை சிறந்த தலைவர்களாக உருவாக்கி எதிர்காலத்தில்நல்லதொரு சமுதாயத்தை கட்டி எழுப்பும் நோக்கோடு இம்மாலை நேரக்கல்விச்செயன்முறை ஆரம்பிக்கப்படுகிறது.



இப்பகுதியிலேயே தகுதியுடையவர்களை கற்பித்தலுக்காக தெரிவுசெய்து அவர்களுக்கான சிறியளவிலான ஊதியத்தையும் வழங்கி இதனை முன்னெடுக்கும் நோக்கிலேயே இச்செயற்றிட்டம் இங்கும் செயற்படுத்தப்படுகிறது.

இது இங்கு மட்டுமல்லாது இனிவரும் காலங்களிலும் மாணவர்களின் அடைவுமட்டத்தை மேம்படுத்தும் நோக்கோடு தாயகத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் இவை தொடரும். களமும் புலமும் "இணைந்து தமிழர் நாமே தமிழர் கட்டமைப்புகளை மீள ஈழத்தில் நிலைநிறுத்துவோம் என்ற தொனிப் பொருளொடு... என்று தெரிவித்தார்.

தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை அதிபர் கேதீஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சிறுவர் அரங்கம்

1143

ஓடுகிறான் மஹேந்தர்.

இல்லை... அவன் ஓடவில்லை. பறக்கிறான்.

ஆனால், அவனுக்கு இறக்கைகள் இல்லையே. பறப்பதற்கு இறக்கைகள் வேண்டும்.

ஓடுவது என்றால், தரை வேணடும். இங்கே தரையும் இல்லை.

'கால்களால் பறப்பது எப்படி?' என்று எண்ணியபடியே ஓடுவதை நிறுத்தினான் மஹேந்தர்.

'தொபீல்' என விழுகிறான். வலிக்கவே இல்லை. 'நான் விழவே இல்லை. இது கனவு' என்ற எண்ணம் எழுந்த அதே தருணம் "ஹ... ஹ்... ம்... ம்... ம்' என்ற சத்தம். பயத்தில் உறைந்து போகிறான்.

'இந்தச் சத்தமும் கனவா?' இல்லை. மீண்டும் அதே சத்தம் 'ஹம்ம்ம்ம்...' ம்ம்ம்.'

அச்சத்தில் காதுகளைப் பொத்திக்கொண்ட மஹேந்தர், ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்க்கிறான்.

அவன் கால்மாட்டில் நின்ற 'பெரிய உருவான' அது 'சரக்' கென விலகிவிட்டது.

தெருவில் ஏதோ வாகனம் செல்லும் சத்தம். ஆடாது, அசையாது கண்களைக் கெட்டியாக மூடிக கொண்டான். பின் எப்படியோ தூங்கியும் போனான்.

மறுநாள். அம்மா, அப்பா, அண்ணன் மூவரும் இருந்தபோது மெதுவாக 'அம்மா' என்றான்.

'என்ன கண்ணு?' என்றாள் அம்மா.

'வந்து... பேய்னு ஒண்ணு இருக்கா?'

அண்ணன் விக்னேஷ் சிரித்தான். அம்மாவின் கைவிரல்கள் அவன் தலைமுடியைக் கோதிவிட்டன. 'ஏன் கேட்கிறே? என்ன ஆச்சு?'

'ராத்திரி ஒரு சத்தம் கேட்டுச்சு. அப்புறம் என் கால்கிட்டே ஒசரமா ஒண்ணு நின்னுச்சு. கண் முழுச்சுப் பார்த்ததும் ஓடிப்போய்ருச்சு.'

மஹேந்தர் குரலில் இருந்த பயத்தைக் கவனித்த அம்மா, கொஞ்ச நேரம் யோசித்தாள். 'சரி



## பயம் என்ற உணர்வு!

வா. மஹேந்தர" என்று அழைத்துச்சென்றாள்.

'நீ படுக்கும் இடம் இதுதானே?' மஹேந்தர் படுக்கையின் தலைப் பக்கம் கண்ணாடி ஜன்னல்களும், அவன் கால்மாட்டில் சற்று தூரத்தில அந்த அறையின் சுவரும் இருந்தது.

'ஆமாம்' என்றான் மஹேந்தர். 'இந்த ஜன்னலைப் பாரு மஹேந்தர். கண்ணாடி ஜன்னல். அப்புறம் நம்ம வீட்டுக்குப் பக்கத்தில் காலி மனை.

அதில் முள்வேலி மரங்கள். சாலையில் ஏதாவது வாகனம் போகும்போது, அதன் முகப்பு விளக்கு வெளிச்சம், கண்ணாடி ஜன்னலில் பட்டுத் தெரிஞ்ச ஒளிக காட்சி மற்றும் நிழல் அசைவுகளை உருவம்னு நினைச்சுக்கிட்டே.'

'ஓ... அப்படியா?' என்ற மஹேந்தர் முகத்தில் சிரிப்பு. 'ஆமாம். அந்த உருவம் ஓடினப்போ, வெளியே வாகனம் போகிற ஓசை கேட்டுச்சு.

ஆனா, அந்த 'ஹ்ம்ம்ம்ம்ம்' சத்தம் வண்டி சத்தம் இல்லையேம்மா. அந்தச் சத்தம் கேட்டு நிறைய நேரம் கழிச்சுதான் உருவத்தைப் பார்த்தேன' என்றான் மஹேந்தர்.

உடனே பக்கத்தில் இருந்த அப்பா, மஹேந்தர் கைகளைப் பிடித்துக்கொண்டு சொன்னார்,

'இதோ இங்கே பாரு மஹேந்தர். நம்ம வீட்டுக்கு முன்னாடி பெரிய நந்தவனம், நிறைய மரங்கள், வீடுகள் அற்ற காலி இடம் இருக்கு தானே? அதுதான். காற்று சுழன்று அடிக்கும் ஓசைதான் அந்த ஹ்ம் ம்ம்ம் சத்தம'

'அப்படியா?' என்றவன் முதுகில் செல்லமாகத் தட்டிய அண்ணன் புன்சிரிப்புடன் கூறினான்,

'நேற்று இரவு நானும் அதே சத்தத்தைக் கேட்டேன். அதே உருவம் அசைஞ்ச மாதிரியான மாயக் காட்சியையும் பார்த்தேன்' என்றான்.

ஆமாம். மஹேந்தர் அருகில் தானே அம்மா, அப்பா, அண்ணனும் படுத்து இருந்தனர்.

'அப்போ பேய் இல்லையா?' என்று கேட்டான் மஹேந்தர். 'ம்... ஆனா பேய்க்குப் பதிலா ஒண்ணு இருக்கு' என்றான் அண்ணன்.

'என்ன அது?' என்றனர் மற்ற மூவரும். 'பயம் என்ற உணர்வு. அதுகிட்டே உண்மையான காரணத்தைச் சொல்லிட்டா, பயந்துகிட்டு ஓடிரும்' என்றான் விக்னேஷ.

05.2015
19

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1535 - பிரெஞ்சு நடுகாண் பயணி ஜாக் கார்ட்டியே வட அமெரிக்கா நோக்கிய தனது இரண்டாவது பயணத்தை 110 பேருடன் மூன்று கப்பல்களில் ஆரம்பித்தார்.
- 1536 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் இரண்டாம் மனைவி "ஆன் பொலெயின்" வேறு ஆணகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள்.
- 1604 - கனடாவின் மொன்ட்றியால் நகரம் அமைக்கப்பட்டது.
- 1649 - இங்கிலாந்தை பொதுநலவாய நாடாக அங்கீகரிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு இங்கிலாந்து குடியரசாக இருந்தது.
- 1848 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: கலிபோர்னியா, நெவாடா, யூட்டா மற்றும் பல பகுதிகளை ஐக்கிய அமெரிக்காவுக்கு $15 மில்லியன்களுக்குக் கொடுக்க மெக்சிக்கோ முன்வந்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது.
- 1897 - ஐரிய எழுத்தாளர் ஆஸ்கார் வைல்டு இங்கிலாந்தின் ரெடிங் சிறையிலிருந்து விடுதலை பெற்றார்.
- 1961 - சோவியத்தின் வெனேரா 1 வீனஸ் கோளைத் தாண்டி, வேறொரு கோளைத் தாண்டிய முதலாவது விண்ணூர்தி ஆனது.
- 1971 - சோவியத் ஒன்றியம் மார்ஸ் 2 விண்கலத்தை ஏவியது.
- 1978 - விடுதலைப் புலிகள் மீதான தடை ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசின்ால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.
- 1991 - அனைத்து மக்கள் வாக்கெடுப்பில் குரொவேசியர்கள் தமது விடுதலைக்காக வாக்களித்தனர்.

### பிறப்புக்கள

- 1762 - யோஃகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (இ. 1814)
- 1882 - மொஹம்மது மொஸாடெக், ஈரானியத் தேசிய இயக்கத்தின் தலைவர்
- 1890 - ஹோ ஷி மின், வியட்நாமியத் தலைவர் (இ. 1969)
- 1925 - பொல் பொட், கம்போடிய சர்வாதிகாரி (இ. 1998)
- 1925 - மால்கம் எக்ஸ், அமெரிக்க மனித உரிமைச் செயற்பாட்டாளர் (இ. 1965)

### இறப்புகள்

- 1904 - ஜாம்செட்ஜி டாடா, இந்தியாவின் நவீன தொழில துறையின் முன்னோடி (பி. 1839)
- 1996 - ஜானகி இராமச்சந்திரன் திரைப்பட நடிகை, தமிழக அரசியல்வாதி (பி.1924)
- 2007 - ஜோதி, தமிழ்த் திரைப்பட நடிகை

### பொல் பொட்



பொல்பொட் (Pol Pot) 1925 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். இவர் முன்னாள் கம்போடிய பொதுவுடமை சர்வாதிகாரி ஆவார்.

1970 களில் தொடங்கப்பட்ட சிவப்பு கெமர் இயக்கத்தின் தலைவராக இருந்து 1976 முதல் 1979 வரை கம்போடியாவின் பிரதமராக இருந்தார்.

இவர் பிரதமராக இருக்கும் பொழுது அதிகாரபூர்வமாக பல கம்போடிய மக்களால் கூட்டு வேளாண்மையிலும் வதை முகாம்களிலும் வேலை செய்யவேண்டியிருந்தது.

இந்த நிகழ்வில் கம்போடிய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 26% உயிரிழந்தனர்.

1979 இல் வியட்நாம் படையெடுத்து சிவப்பு கெமர் அரசு முடிந்துவிட்டது. போல் போட் அகற்றி தென்மேற்கு கம்போடியக் காட்டுக்கு தப்பிவிட்டார்.

1989இல் வியட்நாம் கம்போடியாவிலிருந்து பின்வாங்கி பொல் பொட் திரும்பவும் கம்போடியா சென்று புதிய கம்போடிய அரசுக்கு எதிராக போராட்டம் செய்துள்ளார்.

1997 இல் இவர் கைது செய்யப்பட்டு இறக்கும் வரை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு




**...ர**ஜினி 1996 மே மாதம் நடைபெற்ற சட்டசபை தேர்தலில், தி.மு.க - தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவாக ரஜினிகாந்த் டெலிவிஷனில் பிரசாரம் செய்தார். அந்தக் கூட்டணி வெற்றி பெற்றது.

1996 மே மாதம் சட்டசபைக்கும், பாராளுமன்றத்துக்கும் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்சியும், ரஜினியின் ஆதரவைப் பெற முயற்சி செய்து வந்தன.

ஆனால் ரஜினியோ, அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அதற்காக, அ.தி.மு.க.வுக்கு எதிராக மற்ற கட்சிகளைக் கொண்டு கூட்டணி அமைக்க முயற்சி எடுத்தார்.

### நரசிம்மராவ்

அந்த சமயத்தில் பிரதமராக நரசிம்மராவ் இருந்தார். அவரை ரஜினிகாந்த் இரண்டு முறை சந்தித்துப் பேசினார். அ.தி.மு.க.வுக்கு எதிரான அணியில் காங்கிரஸ் சேரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆனால், நரசிம்மராவ் பிடிகொடுத்துப் பேசவில்லை. அவர் அ.தி.மு.க.வுடன் கூட்டு சேர விரும்பியதே இதற்குக் காரணம்.

நரசிம்மராவின் போக்கினால் ரஜினிகாந்த் விரக்தி அடைந்தார்.

எனவே, இமயமலைச் சாரலுக்குச் சென்றார். சில நாட் களுக்குப்பின் சென்னை திரும்பினார்.

'என்னுடைய படங்களை எந்தக் கட்சியும் பயன்படுத்தக்கூடாது. என் ரசிகர்கள், தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை தேர்தலுக்கு முன் அறிவிப்பேன்' என்று அறிக்கை விடுத்தார். பின்னர், அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

### காங்கிரஸ் உடைந்தது

இதற்கிடையே காங்கிரஸ் தலைவர்கள் ஜி.கருப்பையா மூப்பனார், ப.சிதம்பரம் ஆகியோர் டெல்லிக்குச் சென்று நரசிம்மராவை சந்தித்தனர். 'அ.தி.மு.க.வுடன் கூட்டு வேண்டாம். தேவையானால், தி.மு.க.வுடன் கூட்டு சேருவோம்' என்று கூறினார்கள்.

ஆனால், நரசிம்மராவ் இதற்கு சம்மதிக்கவில்லை. வேட்பு மனு தாக்கல் தொடங்கிய தினத்துக்கு மறுநாள், 'அ.தி.மு.க.வுடன் தான் காங்கிரஸ் கூட்டு சேருகிறது' என்று அறிவித்தார்.

இது, தமிழ்நாடு காங்கிரசில் பெரிய பூகம்பத்தை உண்டாக்கியது. அ.தி.மு.க.வுடன் கூட்டு சேருவதை விரும்பாத மூப்பனார், காங்கிரசிலிருந்து பிரிந்து "தமிழ் மாநில காங்கிரஸ்' என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். காங்கிரசில் பெரும்பாலோர் இந்தப் புதிய கட்சியில் சேர்ந்தனர்.

### தி.மு.க.வுடன் கூட்டணி

அமெரிக்காவிலிருந்த ரஜினியுடன் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்கள் டெலிபோனில் தொடர்பு கொண்டு பேசினார்கள். அமெரிக்காவில் இருந்தபடியே, தி.மு.க. தலைவர் கருணாநிதியுடனும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்களுடனும் டெலிபோனில் மாறி மாறி பேசினார், ரஜினி. இதன் மூலம், 'தி.மு.க - தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி' உருவாயிற்று.

### டெலிவிஷனில் பிரசாரம்

1996 மே மாதம் சட்டசபைக்கும், பாராளுமன்றத்துக்கும் தேர்தல் நடந்தது. அ.தி.மு.க - இ.காங்கிரஸ் ஓரணியாகவும், தி.மு.க - தமிழ் மாநில காங்கிரஸ் ஓரணியாகவும் போட்டியிட்டன.

தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னால், டெலிவிஷனில் ரஜினிகாந்த் தோன்றினார். அ.தி.மு.க - இ.காங்கிரஸ் அணியை தோற்கடிக்குமாறும், தி.மு.க - தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியை ஆதரிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

### தி.மு.க. கூட்டணி

இந்த தேர்தலில் தி.மு.க. 167 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க.வின் தோழமை கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் 39 இடங்களை கைப்பற்றியது.

அ.தி.மு.க.வுக்கு 4 இடங்கள் மட்டுமே கிடைத்தன. பர்கூர் தொகுதியில் போட்டியிட்ட ஜெயலலிதா தோல்வி அடைந்தார்.

புதிய மந்திரிசபையை தி.மு.க. அமைத்தது. 4 ஆவது முறையாக, தமிழக முதல்-அமைச்சராக கருணாநிதி பதவி ஏற்றார்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-142



**...யா**ரு பெத்த மக ராசியோ? குத்தவச்ச கெழவி கும்புட்டு உக்காந்திருக்கா ஒரு ஓரமா.

இருங்கச் சோளம் மட்டும் குத்தியெடுத்தாப் பத்தாது. அரிசியத் தொவைக்கணும்; இல்லாட்டி வெளங்காது. ஒரல்ல குத்துன சோளத்தை அவளே அள்ளுனா; பொடச்சா. அரிசி மேல லேசாத் தண்ணி தெளிச்சு பழைய படி ஒரல்ல போட்டுப் பொய்க்குத்தாக் குத்தித் தும்பப் பூ மாதிரி தொவைச்சும் குடுத்திட்டா. அவளக் கும்பிட்டு வாங்கி அழுது போறா கெழவி.

திம்சு நல்ல குணவதி போலிருக்கே.

ஊருக்குள்ள சின்னச் சின்னதா சின்னச் சின்னதா நல்ல பேரு பரவுது அவளுக்கு.

நல்லதுக்கு றெக்கை கட்டி விடுறதும் கெட்டதுக்குக் கொம்பு சீவி விடுறதும் ஊருக்குள்ள மூணே மூணு பேருதான்.

ஒண்ணு-சலவைக் காரன்-

ரெண்டு-சவரக்காரன்-

மூணு- ஊர்மாடு மேய்க்கிறவன்.

மூணுபேரையும் கூப்பிட்டா.

யப்பா எல்லா வீட்டுக்கும் ஏனம் எடுத்து அலையாதீக. இன்னைக்கிருந்து நான் திங்கிற சுடு சோத்துல சரிசோறு உங்களுக்கு; காயோ கறித்துண்டோ எங்க வீட்டுக் குழம்புல எனக்கில்லைன்னாலும் ஒங்க சட்டியில ஒங்களுக்கு விழுகுமப்பா.

சொக்கத்தேவன்பட்டிய மூணாப் பிரிச்சு மூணு பேருக்கும் பட்டாப்போட்டுக் குடுத்த மாதிரி கெறங்கிக் கிறுகிறுத்துப்போனாக மூணு பேரும்.

சடையத்தேவரப் பெரியமாமுன்னு கூப்பிட்டுப் பழகிட்டா; கட்டையன மாமுன்னு கூப்பிட்டுப் பழகிட்டா திம்சு.

பெரிய மாமு! கொடியில கெடக்கே... கிழிஞ்சு போன பழைய வேட்டி சட்ட என்ன பண்ணப்போறீக?

என்னத்தப் பண்றது? அறிஞ்சு போற வரைக்கும் அங்கேயே கெடக்கும் தாயி.

நான் எடுத்துக்கிரட்டுமா?

எடுத்துக்க.

கிழிஞ்சுபோன வேட்டி சட்டைகள எல்லாம் கூப்பிட்டு வச்சுக் குடுக்கவும் நொண்டி நோஞ்சானெல்லாம் திடும்ன்னு விழுந்திருச்சுக திம்சு கால்ல. குடுக்குச் சொன்னது பெரிய மாமு, அவரு கால்ல விழுங்க.

உள்ள கூட்டிட்டுப் போயி சடையத்தேவர் கால்ல மளார் மளார்ன்னு அவ விழுக வைக்கவும் முதுகுத்தண்டுல மழை விழுந்து கும்பி குளுந்து போச்சு கெழவனுக்கு.

சடையத்தேவர் அந்த மொதமயக் கத்தவிட்டு முழுசாத் தெளியுமுன்ன ரெண் டாம் வைத்தியம் ஆரம்பிச்சுட்டா திம்சு.

சடையத்தேவருக்கு முடி வெட்டச் சொன்னா சவரக் காரனக் கூப்பிட்டு.

பொத்தக்கள்ளி மூஞ்சி;

நெருஞ்சி முள்ளு ரோமம்;

வேலாம்பட்டத் தோலு.

பாறைக்கெல்லாம் சவரம் பண்ணா தீங்கப்பான்னு படபடக்குது கத்தி.

முடிஞ்சுது.

கோவணத்தக் கட்டிவிட்டு ஒரு ஓரமா உக்காரவச்சா கெழவன. நல்லெண்ணெய ஊத்துனா கரண்டியில. பட்டமொளகா ஒண்ணு. வெள்ளப் பூடு ரெண்டு பல்லு, கருமொளகு மூணு, மூணையும் உள்ள போட்டு எண்ணெயச் சுடவச்சா. ஒரு எளம் வெதும்பல்ல எடுத்தா; தொங்குற சீலயச் சுருட்டித் தொடையிடுக்குல செருகிக் கிட்டா.

கரகரகரன்னு தேச்சா பெரிய மாமன் தலையில.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியில் குளித்த எம் உறவுகளை

## (முள்ளிவாய்க்கால் நி











நாட்டில் நடைபெற்ற இறுதிப்போரில் கொல்லப்பட்ட தமிழ்மக்களை நி
வாய்க்கால் கோரப்படுகொலை நினைவு நாள் எழுச்சியுடன் துக்கநாள் அனுஷ
களில் குறிப்பாக இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்ல
உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை
முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி விக்னேஸ்வரன் நினை

இதன்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மா
திருமதி.விஜயகலா மகேஸ்வரன் உட்பட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்
பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராலும் மாணவர் ஒன்றியத்தினா
மேஸ்வரன் சிவன்கோவிலிலும், நூலக கேட்போர் கூடத்திலும் பெருமளவில்
பெற்றது. கீரிமலை நகுலேஸ்வர் ஆலயத்தில் உயிரிழந்த உறவுகளின்
நிறைவேற்றும் வழிபாடுகள் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அ
இதில் வடக்கு மாகாண முதலமைச்சரும் கலந்து கொண்டிருந்தார். தமி
கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு மற்றும் வாகரை
நடைபெற்றது.மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கோவில்
நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டிருந்தன. இதேவேளை புலம்பெயர் தேசங்
நினைவுகூரப்பட்டிருந்தன.

(படங்கள்:-உ

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளை உயிரில் சுமந்த கணங்கள்

## ... நினைவேந்தல்)








...களை நினைவுகூரும் வகையில் தமிழர் தேசம் எங்கும் முள்ளி
...ள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. தாயகத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்
... கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்றையதினம்
...ன சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில்
... நினைவுச்சுடரை ஏற்றி அஞ்சலியினை ஆரம்பித்து வைத்தார்.
...ளர் மாவை சேனாதிராஜா, மகளிர் விவகார பிரதி அமைச்சர்
...ப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் யாழ்.
...ந்தினா... ஏற்பாடு செய்யப்பட்ட நினைவஞ்சலி கூட்டங்கள் பர
...ருமளவிலான மாணவர் பங்கேற்புடன் பெரும் எழுச்சியுடன் நடை
...வுகளின் ஆத்மாக்கள் சாந்தியடையும் வகையில் பிதிர்க்கடன்
...பட்ட அமைப்பாளர் துவாரகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றது.
...ார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வடக்கு,
... வாகரையில் பெருமளவிலானோர் பங்கேற்புடன் எழுச்சியுடன்
...கோவில்கள், பொது இடங்கள் என பல இடங்களிலும் நினைவு
...ர் தேசங்களிலும் தமிழின அழிப்பு நாள் பெரும் எழுச்சியுடன்
...பகள்:-உ.சாளின், குருமன்காடு, முள்ளியவளை செய்தியாளர்கள்)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க மடிக் கணினிகள் மகிந்தவுக்கு ஆப்பு வைத்தனவா?



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது தோல்விக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தைக் கூறி வருகிறார். இப்போது கடைசியாக அவர் கூறியிருக்கும் காரணம் அமெரிக்கா கொடுத்த 3500 மடிக்கணினிகள்தான்.

இலங்கை இளைஞர்களுக்கு அமெரிக்கா 3500 மடிக்கணினிகளைக் கொடு த்து அதன் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவித்திருக்கிறார் மகிந்த ராஜபக்ச. இதற்கு முன்னர் அவர் இந்தியப் புலனாய்வு அமைப்பான றோவைக் குற்றஞ்சாட்டினார். அமெரிக்காவின் சி.ஐ.ஏ, பிரித்தானியாவின் எம் 16 புலனாய்வு அமைப்புகளையும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அதைவிட, தன்னைச் சுற்றியிருந்தவர்களை எல்லாம் குற்றஞ்சாட்டினார். இப்போது அவரது குற்றச்சாட்டு மடிக்கணினிகளின் மீது விழுந்திருக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் இலங்கை மீது அமெரிக்காவின் கவனமும் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

சீனாவுடன் மகிந்த ராஜபக்ச அரசாங் கம் அளவுக்கதிகமாக நெருங்கி உறவாடத் தொடங்கியதும் அமெரிக்காவுடனான உறவுகளில் ஏற்பட்ட இடைவெளியின் நேரடி விளைவே அது.

இதனால் மனித உரிமை விவகாரங்களைக் காரணம் காட்டி போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து, இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்தது அமெரிக்கா.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்த அதேவேளையில், உள்நாட்டிலும், மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதிலும் சிவில் சமூகத்தையும் எதிர்க்கட்சிகளையும் பலப்படுத்துவதிலும் அமெரிக்கா கணிசமான பங்காற்றியது.

சர்வதேச அரங்கில் இலங்கை மீது அமெரிக்கா கொடுத்த அழுத்தங்கள் வெளிப்படையானதாக இருந்தன. ஆனால் உள்நாட்டில் மகிந்த ராஜபக்ச் அரசாங் கத்தின் மீது கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் மறைமுகமானதாக இருந்தன. அது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பலவீன ப்படுத்துவதற்கான முயற்சியாக வெளித் தெரியாத வகையில் அமைந்திருந்தது.

அமெரிக்காவின் நோக்கத்தை மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தனது பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்திலேயே புரிந்து கொண்டிருந்தது.

பற்றீசியா புரெனிசுக்குப் பின்னர், 2012 ஆம் ஆண்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற மிச்சேல் ஜேசிசன் அம்மையார் இலங்கை அரசாங்கத்தினால் கடுமையாக வெறுக்கப்படும் ஒருவராக மாறியிருந்தார்.

அதற்கு அடிப்படையான காரணமே அவர் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதுடன் சிவில் சமூகத்துடனான உறவுகளை வலுப்படுத்தி வந்தார்.

சிவில் சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட கருத்தியல் மாற்றம், கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு முக்கியமான காரணியாக இருந்தது.

சிவில் சமூகத்தின் மத்தியில் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு ஏற்பட்ட வெறுப்பே எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவும், அவருக்கு ஆதரவளிக்கவும் பிரதான காரணம் என்பதில் சந்தேகமில்லை.

ஆட்சி மாற்றத்தில் அமெரிக்காவின் பங்கு வெளிப்படையானதாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக நிச்சயம் கணிசமானது என்பதை ஏற்றேயாக வேண்டும்.

தேர்தலுக்கு அண்மைய காலப்பகுதி யில் ஐ.தே.கவின் ஊடாக இளைஞர்களுக்கு அதிகளவில் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. குறிப்பாக சமூக வலைத் தளங்களைப பயன்படுத்துவது குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

அது குறித்து மகிந்த ராஜபக்ச அரசாங்கம் சந்தேகம் வெளியிட்டிருந்தது என்பதுடன, அது அரபுலகப் புரட்சி போன்ற ஒன்றை இலங்கையிலும் ஏற்படுத்தும் முயற்சி என்றும் குற்றஞ்சாட்டியது.

ஆனாலும் அரபுலகப் புரட்சி போன்று இலங்கையில் ஏற்படாது என்று அரசாங்கம் உறுதியாக நம்பியது. அதை பகிரங்கமாக வெளிப்படுத்தியும் இருந்தது. ஆனால் ஜனவரி 8 ஆம் திகதி நடந்தது அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்ட விடயமாகும்.

அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தற்போதைய வெளிவிவகார அமைச் சர் மங்கள சமரவீரவின் கட்டுப்பாட்டிலிரு நத இணையத் தளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டியிருந்தார் மகிந்த ராஜபக்ச.

மங்கள சமரவீரவின் கட்டுப்பாட்டில் அதிகளவு இணையத்தளங்கள் உருவாக்கப்பட்டதும் அவை அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களில் முக்கிய பங்கு வகித்ததும உண்மையே. அதுபோன்று இணையத்தளங்கள் தமக்கு ஆதரவாக இருக்கவில்லை என்று வருத்தப்பட்டிருக்கிறார் மகிந்த ராஜபக்ச.

ஆனால் மகிந்த ராஜபக்ச செய்த தவறு, தானும் மங்கள சமரவீரவின் பிரசாரத்துக்கு இணையாக ஊடகங்களைப் பயன்படுத்த தவறியதே.

மகிந்த ராஜபக்ச ஊடகங்களை ஒடுக்குவதிலேயே கவனம் செலுத்தினாரே தவிர தனக்கான ஊடகங்களை பெருக்க முனையவில்லை. மங்கள சமரவீர உருவாக்கிய பல இணையத்தளங்களை முடக்கியும், தடை செய்தும் சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் தனது பெயரை கெடுத்துக் கொண்டார் மகிந்த ராஜபக்ச. தமிழ் இணையத்தளங்கள் பலவற்றைத் தனக்கு ஆதரவாகத் திருப்புவதில் வெற்றி கண்ட மகிந்த ராஜபக்ச, சிங்கள, ஆங்கில இணையத்தளங்களை அவ்வாறு பெருமளவில் வெற்றிகொள்ள முடியாது போனது.

மகிந்த ராஜபக்ச ஊடகங்களைத் தனக்கு வசதியாகப் பயன்படுத்தாமல் போனது அவரது பின்னடைவுக்கு முக்கியமான காரணம் தனக்கெதிரான ஊடகங்களை முடக்கி விட்டால், ஊடகங்களின் சுதந்திரத்தை நசுக்கி விட்டால் அதுவே தனக்கு வெற்றியாகும் என்று அவர் தப்புக்கணக்கு போட்டார்.

ஆனால் இணைய ஊடகங்கள் முடக்கப்பட்டாலும் சமூக வலைத்தளங்களின் ஊடாக கருத்துக்கள் பரவும் என்ற உண்மையை அவரால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதேவேளை அமெரிக்காவின் இணையத் தொழில்நுட்பம், மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தனக்கு வசதியாகப் பயன்படுத்தக்கூடிய இணைய வெளியை மகிந்த ராஜபக்ச குறுகிய வழியிலேயே பயன்படுத்திக் கொண்டார்.

சீனாவின் நவீன தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொண்டு அதனைப் பயன்படுத்தி ஊடகங்களை நசுக்குவதிலேயே குறியாக இருந்தார் மகிந்த.

அதற்காகவே அப்போதைய அரசாங்கத்தின் வளங்கள் அதிகளவில் செலவிடப்பட்டன. அது மகிந்தவுக்கு எதிர்மறையான பலன்களையே கொடுத்திருந்தது.

மகிந்த ராஜபக்ச கூறுவது போன்று தனக்காகப் பயன்படுத்துவதற்கு ஊடகங் களோ, இணையங்களோ இருக்கவில்லை என்பது பொய். அவற்றைத் தன் கைக்குள் வைத்திருந்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை அவருக்கு சரியாகத் தெரிந்திருக்கவில்லை.

அதைவிட கடைசி நேரத்தில் மகிந்த ராஜபக்ச இணைய ஊடகங்களை தனக்கு ஆதரவாகப் பயன்படுத்துவதாக இந்திய தகவல தொழில்நுட்ப நிபுணர்கள் சிலரைப் பயன்படுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனாலும் அவரால் தேர்தாலில் வெற்றி பெற முடியவில்லை.

அமெரிக்கா 3500 மடிக் கணினிகளை வழங்கியது என்ற தகவல் உண்மையானால் அது ஆட்சி மாற்றத்தில் கணிசமான பங்கை ஆற்றியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதேவேளை அமெரிக்கா ஆட்சி மாற்றத்தை மட்டும் குறியாக வைத்திருந்ததா? என்ற கேள்வியும் உள்ளது.

அண்மையில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடன் கொழும்பு வந்திருந்த உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் கொழும்பில் தங்கியிருந்த போது அமெரிக்க தூதரகத்தின் ஐபஸ் எஸ்.எல் என்ற ஒரு சேவையை ஆரம்பித்து வைத்திருந்தார்.

அது கிராமங்களுக்கும் இணைய வசதிகளை அறிமுகப்படுத்தும், கொண்டு செல்லும் அமெரிக்காவின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

நவீன கணினிகள் பொருத்தப்பட்ட இணையைத் தொடர்பு வசதிகளுடன் கூடிய அந்த ஐபஸ் திட்டம், கிராமப் புறங்களுக்கும் கணினியைக் கொண்டு செல்லும் திட்டமாகும். இதற்குப் பின்னால் வேறேதும் திட்டங்கள் இருக்கிறதா என்று தெரியாது.

ஆனால் இப்போதைய நிலையில் இலங்கையில் ஆட்சியை மாற்றும் திட்டம் எதுவும் அமெரிக்காவுக்கு இல்லை என்பது மட்டும் உண்மை.

எனவே அமெரிக்காவின் தகவல் தொழிலநுட்ப விருத்தி தனியே ஆட்சி மாற்றங்களுக்கான அடிகோலாக மட்டும் கருத முடியவில்லை.

தனியே இணையத் தளங்களும், ஊடகங்களும் மட்டும் ஆட்சியை மாற்றியதாக தப்புக் கணக்கு போடுகிறார் மகிந்த ராஜபக்ச.

இணையத்தளங்கள் ஆட்சி மாற்றத்திற்கான ஒரு கருவியாக மட்டுமே இருந்தனவே தவிர, அவையே முழுக் காரணிகள் அல்ல.

மகிந்த ராஜபக்ச செய்த தவறுகள்தான் அவரைப் பழி தீர்த்திருந்தது. அதற்காகவே ஏனைய காரணிகள் ஒன்றிணைந்து அவரைக் கீழிறக்கி இருந்தன.

இப்போது மகிந்த ராஜபக்சவுக்கு, தான் செய்த தவறுகள் எல்லாம் ஒவ்வொன் றாகத் தெரியவரத் தொடங்கியிருக்கின்றன.

ஆனால் எது பெரிய தவறு என்று அவரால் கண்டறிய முடியவில்லை. அதனால் தான் அவர் அவ்வப்போது ஒவ்வொரு காரணங்களை தேடிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு எதிராக இராணுவம் யுத்தத்தை முன்னெடுக்கவில்லையாம்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கை இராணுவம் தமிழர்களுக்கு எதிராகவோ அல்லது வேறு இனத்திற்கு எதிராகவோ யுத்தம் செய்யவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இலங்கை இராணுவம் தமிழர்களுக்கு எதிராக யுத்தம் செய்ததாக காட்டுவதற்கு சிலர் முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் அமெரிக்காவால் உலகில் கடுமையான பயங்கரவாத இயக்கம் என்று அறிவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகவே இலங்கை இராணுவம் யுத்தம் செய்தது.

நாடு இரண்டாக பிளவுற்றுக் காணப்பட்டதாகவும் அப்போது இலங்கையில் மீட்கப்படாத பிரதேசம் காணப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அப்படியான நாட்டை ஒன்று சேர்க்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இராணுவத்தினர் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும் சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கும் அளவிற்கு சென்றுள்ளதாகவும் ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற சமய நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (3-5)

# உச்சநீதிமன்றம் சுயாதீனமாக இயங்கவில்லை என பிரதமர் ரணில் எவ்வாறு கூறமுடியும்

## கேள்வி எழுப்புகிறார் மஹாநாமஹேவா

(கொழும்பு)

உச்சநீதிமன்றம் சுயாதீனமாக இயங்கவில்லை என எவ்வாறு பிரதமர் கூற முடியும் என மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதிபா மஹாநாமஹேவா கேள்வியெழுப்பியுள்ளார். சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்கி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள நிலையில், பிரதமர் எவ்வாறு நீதிமன்றின் நடவடிக்கை சுயாதீனமற்றது என கூற முடியும்?

உச்ச நீதிமன்றினால் அண்மையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கைது தொடர்பில் வழங்கிய தீர்ப்பிற்கு பிரதமர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

நாட்டின் நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்கி வருவதாக் ஜனாதி பதி அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த கூற்றுக்கு எதிராக பிரதமர் எதன் அடிப்படையில் கருத்து வெளியிடுகின்றார் என்பது எமக்குப் புரியவில்லை.

மேலும் நாட்டின் உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக தீர்ப்பளிக்க வேறு நிறுவனாங்களுக்கு முடியாது.

வேண்டுமென்றால் இது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உதவியை நாட முடியும்.

கோத்தபாய ராஜபக்ஷ குறித்த தீர்ப்பினை வழங்கிய நீதியரசர்களை பிரதம நீதியரசரே நியமித்தார்.

அதில் ஒர் நீதியரசர் விலகிக் கொண்டு அது குறித்து பிரதம நீதியரசருக்கு அறிவித்துள்ளார். அதன் பின்னர் இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பினை வழங்க அதிகாரத்தை



பிரதம நீதியரசர் வழங்கியுள்ளார்.

இந்த தீர்ப்பு தொடர்பில் எதிராக ஐவர் அல்லது எழுவர் அடங்கிய நீதியரசர் குழாம் ஒன்றின் மூலம் தீர்ப்பு வழங்குமாறு மேன்முறையீடு ஒன்றை செய்ய முடியும்.

19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களை பிரதமருக்கு வழங்கியிருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என பிரதிபா மஹாநாமஹேவா மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை நாட்டு மக்கள் நிராகரித்துள்ளனர்

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மக்கள் நிராகரித்துள்ளனர் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

20 ஆம் திருத்தச் சட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்.

எனினும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேட்பு மனுக்களை வழங்குவது குறித்தே நான் கவனம் செலுத்துகின்றேன்.

அதில் பிழைகள் இடம்பெற அனுமதிக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டுமாயின் கை சின்னத்தில் போட்டியிட வேண்டும்.

யார் என்ன சொன்னாலும் நாம் அதனைச் செய்ய வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷ, தம்மைப் பற்றி இன்னமும் உரிய முறையில் மதிப்பீடு செய்யவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பாரியளவில் பணத்தை செலவிட்டு தேர்தல் பிரசாரம் செய்த போதிலும் பெரும்பான்மை மக்கள் மகிந்தவை நிராகரித்தனர்.

சிறு அரசியல் கட்சிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாது.



இதனால் மகிந்தவை பிடித்துக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற சில சிறு கட்சிகள் முயற்சிப்பதாக அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த விடயத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் [illegible] ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (3-5)

# இன்று ஒரு தகவல்

## நம்மை நாமே நெறிப்படுத்துவோம்

நல்வாழ்வு வாழ வேண்டுமென்று உறுதி செய்து கொள்ளும் நண்பர்கள் தங்களிடையே சில தகுதிகளை உண்டாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம். நல்வாழ்வு என்பது வெறும் சிந்தனையா லும் பகற்கனவு காணுவதாலும் சாதித்து விடக்கூடிய காரியமல்ல. சிரமப்பட்டு உழைத்து சில பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டு அந்தப் பண்பிலிருந்து சற்றும் பிறழாமல் வாழ முற்பட்டால் தான் நல்வாழ்வுக்கான சரியான பாதையில் அடி எடுத்து வைக்க முடியும்.

**இந்த நூலைப் படிக்கும் நீங்கள் ஒரு ஆணா?**

அப்படியானால் கீழேயுள்ள எட்டு முக்கிய அம்சங்களைக் கவனியுங்கள். பிறகு உங்களைப் பற்றிச் சிந்தனை செய்யுங்கள். சாதாரணமாக தங்கள் வாழ்க்கை எந்த நிலையில் அமைந்திருந்தாலும் அதில் ஒரு திருப்தியும் ஓர் அமைதியும் அடைபவர்கள் கிட்டத்தட்ட கீழ்க்கண்ட எட்டு குணங்களை உடையவர்களாக இருப்பார்கள்.

1. எந்த நேரத்திலும் ஒரேவிதமான தோற்றத்தை உடையவர்க ளாக இருப்பார்கள்.

2. யாருடனும் எந்த நேரத்திலும் சட்டென ஒட்டிப் பழகி அவருடன் ஒத்துழைப்பார்கள்.

3. செய்யும் தொழிலில் உடன் உழைக்கும் நண்பர்களிடம் சுமுகமாகவும் நட்புறவாகவும் பழகுவார்கள். சண்டை சச்சரவு ஏற்படக் கூடிய நேரங்களில் தணிந்து விட்டுக் கொடுத்து அப்படி ஒன்றும் ஏற்படாமல் தடுத்து விடுவார்கள்.

4. அவர்கள் தோற்றத்தில் டாம்பீகம் இருக்காது. சாந்த மூர்த்தி யாகக் காட்சி தருவார்கள். அதிகமாகப் பேச மாட்டார்கள். அப்படியே பேச நேரிட்டாலும் சாமான்யரைப் போல்தான் பேசுவார்கள்.

5. பிறர் உதவியை நாடுவதைவிட தன் முயற்சியே அவர்களிடம் மேலோங்கி இருக்கும். சிறு வேலையைச் செய்வதற்குக்கூட உதவி க்காக மற்றவர்கள் முகத்தைப் பார்க்க மாட்டார்கள். சிலர் கேவலம் என்று ஒதுக்கித் தள்ளும் வேலைகளை எல்லாம்கூட தான் செய்ய வேண்டிய சமயம் ஏற்பட்டால் சிரத்தையுடனும் பொறுப்புடனும் செய்ய முற்படுவார்கள்.

6. எந்த நிமிடத்திலும் எப்பேர்ப்பட்ட பெரும் பொறுப்பை ஏற்கவும் தயங்கமாட்டார்கள். அதை தயங்காமல் ஏற்றுச் செயலாற்றுவதில் பின்வாங்க மாட்டார்கள்.

7. எளிதில் களைப்பும் அயர்வும் அடைந்துவிடமாட்டார்கள். தொழிலில் இறங்கி விட்டால் பசி, தூக்கம் போன்றவை அவர்களை விட்டுப் பறந்து விடும்.

8. தோல்வியை எண்ணிக் கலங்க மாட்டார்கள். பிறரால் தான் அவமானப்பட நேரிட்டாலும் அதற்கான உண்மைக் காரணத்தை மட்டும் தெரிந்து கொண்டு அந்தச் சம்பவத்தை அத்தோடு அடியோடு மறந்து விடுவார்கள்.

இப்படிப்பட்ட எட்டுவித தகுதிகளும் உங்களிடம் அமைந்திருக்கின்றனவா? கீழே எட்டுவீத அம்சங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்த எட்டு அம்சங்களும் நல்வாழ்வு வாழ விரும்பும் நண்பர்களிடமி ருந்து அறவே மறைந்தாக வேண்டும்.

வாழ்க்கையில் அதிருப்தியும் மனதில் குழப்பமும் உள்ளவர்களிடம்தான் இந்த எட்டு அம்சங்களும் காணப்படும். இப்படிப்பட்டவர்களால் நல்வாழ்வு வாழவே முடியாது. இவர்கள்...

1. தாழ்வுமானப்பான்மை கொண்டவர்கள்

2. இந்தப் பலவீனத்தை மறைப்பதற்காக வீட்டில் மனைவி, மக் களை சதா துன்புறுத்திக்கொண்டே இருப்பார்கள். அல்லது காரி யாலயத்தில் தமக்குக் கீழ் வேலை செய்பவர்களைக் கொடுமைக்கு உட்படுத்துவார்கள்.

3. எந்த விடயத்தையும் ஆழ்ந்து நோக்கமாட்டார்கள். நுனிப்புல் மேய்வது இவர்கள் சுபாவம். எந்த வேலையைச் செய்தாலும் அரை குறையாகவே செய்வார்கள்.

4. ஒழுக்கத்தைப் பற்றியும் பண்பாட்டைப்பற்றியும் எப்போது பார்த்தாலும் பேசிக்கொண்டே இருப்பார்கள். ஆனால் சொந்த வாழ்வில் அவற்றை காற்றில் பறக்கவிட்டு விடுவார்கள்.

5. அவர்கள் முகத்தில் மலர்ச்சி என்பதே இருக்காது. எதையோ பறி கொடுத்தவர்கள் போல எப்போதும் உம் என்று இருப்பார்கள்.

6. எடுத்ததெற்கெல்லாம் விவாதம் செய்வார்கள். அற்ப விடயங்களைப் பற்றியெல்லாம் தொண்டை அதிர எதிர்ப்பிரசாரம் செய்து கொண்டு இருப்பார்கள்.

7. வீட்டில் தங்க மாட்டார்கள். சதா வெளியில் அலைந்துகொண்டு இருப்பதில்தான் இவர்களுக்கு உற்சாகம் அதிகமாக இருக்கும்.

8. பணத்தின் அருமை இவர்களுக்குத் தெரியாது. சம்பாதிப் பதை விட இரண்டு மடங்கு அதிக செலவு செய்வது இவர்களுடைய சுபாவ மாக இருக்கும். மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எட்டு அம்சங்களும் உங் களை அண்டவிடாமல் நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

**இந்நூலைப் படிக்கும் நீங்கள் ஒரு பெண்ணா?**

தயவுசெய்து கீழே குறிப்பிடப்படும் எட்டு அம்சங்களையும் ஆராய் ச்சி உள்ளத்துடன் கவனியுங்கள். வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் திருப்தியையும் வலுவில் உண்டாக்கிக் கொண்டு நல்வாழ்வு வாழும் பெண்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்தாம் இவை.

1. அன்பு தவழும் உள்ளம் இவர்களுக்கு இருக்கும்.

2. முன்னோர்களின் பழக்க வழக்கங்களை எளிதில் கைவிட இவர்கள் மனம் துணியாது. அப்படிப்பட்ட அவசியம் நேர்ந்தால் தீர்க்கமான ஆலோசனைக்குப் பிறகுதான் அவ்விதம் செய்வார்கள்.

3. சிக்கனத்தைக் கையாளுபவர்களாக இருப்பார்கள். குடும் பத்தில் செலவை மேலும் குறைப்பதற்கான வழிகளைப் பற்றியே சதா யோசித்துக் கொண்டிருப்பார்கள்.

4. விரைவில் கோபம் இவர்களை அணுக முடியாது.

5. பொதுநல சேவை, சமூகத்தொண்டு, அரசியல் வாழ்வு, சினிமா, நாடகம் போன்ற பொழுதுபோக்குகள் ஆகியவற்றில் இவர்களுக்கு ஆர்வமோ அக்கறையோ அதிகம் இருக்காது.

6. குழந்தைகளைக் காணும்போது (இவர்கள் யாருடைய குழந்தைகளாக இருந்தாலும் சரி) அவர்களிடம் அன்பு கொண்டு கொஞ்சி மகிழ இவர்கள் மனம் ஆவல் கொள்ளும்.

7. ஆடை அணிகலன்கள்போன்றவற்றில் இவர்களுக்கு அதிகமாக இச்சை இருக்காது. வீண் அலங்காரங்களில் இவர்களுக்கு நாட்டம் இருக்காது.

8. காலம் தவறாமல் குடும்ப அலுவல்களைச் செய்வதில் இவர்கள் சமத்தர்கள். பயனற்ற வீண் வம்புகள் பேசி கால விரயம் பண்ண இவர்களுக்குத் தெரியாது. இந்தத் தகுதிகள் உங்களிடம் இருக்கின்றனவா? இருந்தால் நீங்கள் நிச்சயம் நல்வாழ்வு வாழ முடியும்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா விடுதலை; அடுத்த ஆட்டத்திற்குத் தயாராகும் சுவாமி

சுப்பிரமணியன் சுவாமி சுறுசுறுப்பாக இருக்கிறார். எப்போது போன் போட்டாலும், சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறார். அவரது ஒவ்வோர் அசைவும் தமிழக உளவுத் துறையால் கண்காணிக்கப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் சுப்பிரமணியன் சுவாமியைத் தொடர்பு கொண்டபோது.....

"தீர்ப்பில் கணக்கு ரீதியான பிழை இருக்கிறது. வருமானத்துக்கு மேலே ஜெயலலிதா சொத்து சேர்த்திருக்காங்க என்பதை நீதிபதி குமாரசாமி ஒப்புக் கொள்கிறார்.

பழைய ஊழல்தடுப்புச்சட்டத்தை உதாரணம் காட்டி, 'மொத்த வருமானத்தோட ஒப்பிடும் போது, அது 10 சதவிகிதத்துக்கும் குறைவாகத்தான் சொத்து சேர்த்திருக் கார். அது பெரிய விடயமில்லை. இந்த ஒரு காரணத்துக்காகவே விடுதலை பணணினேன்'னு சொலகிறார்.



அந்தச் சட்டம் 1977 இல் இருந்தது. 1988 இல் அந்தச் சட்டத்தையே ராஜீவ் காந்தி மாற்றிவிட்டார். புதுசா கொண்டுவந்த சட்டத்துல, அந்த 10 சதவிகிதம் போன்ற எந்த ஷரத்தும் இல்லை. ஆக, நடைமுறையிலலாத ஒரு சட்டத்தைத் தனது தீர்ப்பில் நீதிபதி ஏனோ குறிச்சிருக்கார்.

தீர்ப்பின் இந்தப் பகுதி உச்சநீதிமன்றத்தில் நிச்சயமா எடுபடாது. நான் இதை முன்வைத்து வாதாடுவேன். தீர்ப்பில் இதுதான் பெரிய குறை" என்று வெடித்தவரிடம் சில கேள்விகள்முன்வைக்கப்பட்டபோது....

**"இதனால், தற்போது நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பு என்ன ஆகும்?"**

"சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா, இதே சொத்துக் குவிப்பு வழக்கில் உள்ள அனைத்து அம்சங்களையும் தீர ஆராய்ந்து சரியாத்தான் தீர்ப்புச் சொன்னார். ஆனா.. இப்போது உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி கூட்டல், கழித்தல் விவகாரத்தில் தவறு செய்திருக்கலாம். இந்த ஒரு விடயத்துக்காகவே தீர்ப்பு ரத்து ஆகும்னு சொல்ல முடியாது. அடுத்ததைப் பத்தித்தான் இனி யோசிக்கணும். அதுதான், அப்பீல்."

**"தற்போது ஜெயலலிதா முதல்வராகப் பதவி ஏற்கலாமா?"**

"சட்டப்படி ஜெயலலிதா இப்போது பதவி ஏற்கலாம். ஆனால், உச்ச நீதிமன்றம் இந்த வழக்கில் ஏதாவது விபரீதமா தீர்ப்பு வழங்கினால்.. அப்போதுதான் பிரச்சினை! தீர்ப்பு எதிராக வந்தால், ஜெயலலிதா மீண்டும் பதவி இறங்க நேரிடும். ஒருவேளை, அவர் இப்போது பதவி ஏற்றாலும்கூட, பிறகு ராஜினாமா கடிதம் கொடுத்துட்டு வெளியேபோக வேண்டி வரும். இதுமாதிரி சந்தர்ப்பம் அவருக்கு ஒண்ணும் புதுசு இல்லையே?"

**"ஜெயலலிதா வழக்கில் உங்களின் அடுத்த நடவடிக்கை என்ன?"**

"என்னைப் பொறுத்தவரையில், கர்நாடகா அரசுக்கு நிர்ப்பந்தம் உண்டாக்கி, அப்பீல்போக வைப்பேன. அரசு வக்கீலாக ஆச்சார்யா வந்திருக்காரே? உச்ச நீதிமன்றம் மூலமாக மீண்டும் அரசு வக்கீலா நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் வாதம் பண்ணினா பாயின்ட்களைப் பிச்சுப் பிச்சுப் போட்டிருவார். அவரோட நானும் இருப்பேன். நான்தானே மனுதாரர்! தி.மு.க அன்பழகனுக்கு வாய்ப்பு கொடுப்பாங்களான்னு தெரியாது. எனக்கு சட்டப்படி உரிமை இருக்கு. கர்நாடகா அரசு அப்பீல் பண்ணாட்டி, நான் பண் ணலாம். அவுங்க அப்பீல் பண்ணினாக் கூட, நான் வாதம் பண்ண சட்டப்படி அதிகாரம் இருக்கு. பொறுத்திருந்து பாருங்க!"

**"ஜெயலலிதா பதவி ஏற்கும் வைபவம் தள்ளிப்போகிறதே? நல்ல நாளுக்காகவா? அல்லது, அப்பீல் விவகாரம் பற்றி ஆலோசனை செய்கிறாரா?"**

"இதை அவர் கிட்டதான் கேட்கணும். இந்த நேரத்தில், ஒரு இரகசியம் சொல்றேன். ஜெயலலிதா வழக்கு விவகாரத்தில் பலபேர் அநாவசியமாக அக்கறை காட்டினாங்க. கர்நாடகாவிலருந்து டெல்லி சென்ற ஒரு வி.வி.ஐ.பி இருக்கிறார். அவரோட பெயரைச்சொல்ல மாட்டேன். அவர் இந்த விவகாரத்துல ஏன் படு தீவிரமாக அக்கறை காட்டினாருன்னு புரியலை. அவரோட ரோலையும் உச்ச நீதிமனறத்துல நான் அம்பலப்படுத்துவேன். இப்போதைக்கு விரிவா சொல்ல முடியாது."

**"தீர்ப்பு வழங்கும் திகதியை நீங்கள் எப்படி முன்கூட்டியே சொன்னீர்கள்?"**

"சில நடவடிக்கைகளை வைத்து தீர்ப்பு இந்தக் கோணத்தில் வரலாம்னு எதிர்பார்த்தேன். அதுவே நடந்தது. தீர்ப்பு தமிழகத்தில் அரசியல் தலைவர்கள் பலருக்கும் அதிர்ச்சியைத் தந்திருக்கு. குறித்து வைத்துக் கொள்ளுங்க. உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிச்சயமா ஜெயலலிதாவுக்கு பாதகமாக வர வாய்ப்புகள் அதிகம் இருக்கு.

ஆனா, தமிழகத்தில் மீண்டும் ஜெயலலிதாவை பதவியைவிட்டு இறக்கினா அதுக்கு மாற்றா, பி.ஜே.பி-யை எப்படி வளர்த்துக்கொண்டு வர்றதுங்கிறதுதான் பிரச்சினை. ஏன்னா இங்கே இருக்கிறவர்களில் சிலர், திராவிட இயக்கங்களோட தவறான கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறாங்க.

ஆனால், நானோ தமிழகத்தில் பி.ஜே .பி சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுறேன்!"

**"ஜெயலலிதா தீர்ப்பு, தமிழக மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல விவகாரங்களில் நீங்கள் சொல்வதெல்லாம் உங்கள சொந்தக் கருத்து என்று தமிழக பி.ஜே.பி தலைவர் தமிழிசை சொல்கிறாரே?"**

"அப்படியா சொன்னாங்க? ஆச்சர்யமா இருக்கே. நான் கட்சியில் செயற்குழு உறுப்பினரா இருக்கேன. இந்தியா முழுக்க எனக்கு பேரு உண்டு. எங்கே போனாலும்கூட்டம் வருது.

நான் எந்த அமைச்சர் கிட்டேயும் பேசு வேன். இங்கே இருக்கிற சிலருக்கு என் மீது உள்ள அரசியல் காழ்ப்பு உணர்ச்சி; பொறாமையால் அப்படிப் பேசுவார்கள். மோடிக்கு என்னைப் பற்றி ஒரு கடிதம் எழுதினார் ஜெயலலிதா.

மீனவர் பிரச்சினையில நான் சொன்ன கருத்துகள் அவருக்குப் பிடிக்கவில்லை. 'சுவாமியின் செயறபாடு பி.ஜே.பி பெயரை சேதப்படுத்திடுச்சுன்னு அந்தக் கடிதத்தில் சொல்லியிருந்தார். அதற்கு பதிலே சொல்லவில்லை. இதெல்லாம் இங்கே இருக்கிறவங்களுக்குத் தெரியுமா?"



**"அ.தி.மு.க-வுடன் பி.ஜே.பி கூட்டணி உறுதியாகி விட்டதா?"**

"தேர்தல் கூட்டணி விடயத்தில் ஜெயலலிதாவுடன் சேருவது பற்றி இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. அதுதொடர்பா, டெல்லியில செயற்குழு கூடி அதுபற்றி இறுதி முடிவெடுக்கணும். அப்போது பார்க்கலாம்!

ஒருவேளை, கட்சியில தீர்மானம் நிறைவேற்றப்பட்டா, நான் கட்டாயம் அதற்கு கட்டுப்படு வேன். மதித்து நடப்பேன்."

**"அப்படியானால்? ஜெயலலிதா விடயத்தில் நீங்கள் பேசியதெல்லாம்?"**

"கட்சியின் முடிவு வேறு. என்னோட பாதை வேறு! ஊழலுக்கு எதிரான என்னுடைய போராட்டத்துக்கு யாரும் முட்டுக்கட்டைபோட முடியாது.

ஊழலுக்கு ஆதரவாகத் தீர்மானம் போடவும் முடியாது. முன்பு, கருணாநிதி ஊழல் பற்றி பேசினேன். இப்போது ஜெயலலிதா ஊழல்பற்றி பேசுறேன். இதெல்லாம், என்னோட தனிப்பட்ட செயறபாடுகள். இதில் யாரும் தலையிடமுடியாது!"

**"அப்படி என்ன ஜெயலலிதா மீது உங்களுக்குக் கோபம்?"**

"என்னுடைய வெப்சைட்டில் எனக்கும் ஜெயலலிதாவுக்கும் கடந்த சில வருடங்களாக நடந்து வரும் போராட்டங்களைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறேன். அதைப் படித்தாலே, பழைய விடயங்கள் புரியும்.

முன்பு ஒருமுறை ஜெயலலிதாவுடன் கூட்டணி சேரும் சூழ்நிலை அமைந்தபோது, அவருக்கு எதிரான ஊழல் வழக்குகளில் இருந்து நான் பின் வாங்கமாட்டேன் என்று சொல்லி விட்டுத்தான் சேர்ந்தேன். பெங்களூர்ல நான் வாதாட வந்த போது, 'சாமிகிட்ட பெரிய தொகை கொடுத்துட்டேன்'னு வதந்தி பரப்பிட்டாங்க. சொல்றவங்க ஆயிரம் சொல்லட்டும் ஊழலுக்கு எதிரான என் போராட்டம் ஓயாது!"

**யூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஐ.தே.கவில் இணைய விருப்பமாம்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

**கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் க்ட்சியன் முக்கிய உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்கு கோரிககை விடுத்துள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலியின் அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நபர் இதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியை வட்டு சென்ற ஒருவராவர்.

நான் 2001ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தேன், 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்றதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.எனினும் பதவி ஆசையில் நான் வேறு கட்சிகளில் இணைந்துகொள்ளவி ல்லை.

தோல்வியுற்ற சந்தர்ப்பத்தல் வேறு கட்சிகளில் இணைந்து கொண்டவர்கள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் தங்களையும் இணைத்துக்கொள்ளுமாறு கோரிககை முன்வைக்கின்றார்கள.

நான் தற்போது என்ன செய்வதென்று மக்களாகிய நீங்களே கூறுங்கள். அத்துடன் எதிர்வரும் இரண்டொரு நாட்களில் சுதந்திரக் கட்சியின சில முக்கியமான உறுப் பினர்கள் எனது வீட்டிற்கு வந்து சந்திப்பதாக தெரிவித் துள்ளார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் (3-5)

# மகிந்தவையும் விமலையும் சிறைப்படுத்துவதற்கு திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சவாலாக விளங்கக் கூடிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவையும் சிறைப்படுத்தும் வேட்டை ஒன்று இடம்பெற்று வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வு பிரிவு பிரதமரின் அறிவுரைகளுக்கமைய செயற்படும் நிறுவனமாகியுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த காலங்களில் இருந்த பொலிஸ் சுயாதீனத் தன்மையை வீணடித்துள்ளதாகவும் முஸம்மில் குறிப்பிட்டுள்ளார்.

வேட்டையாடும் நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுத்து செல்லப்படுவதாகவும், தங்களுக்கு சவாலாக உள்ள அனைவரையும் சிறைப்படுத்த முயற்சிப்பதாகவும், இதற்காக மிகவும் வஞ்சகமான முறையில் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# ஐ.தே.கவே எனது பரம்பரை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

எனது பரம்பரையிலுள்ளவர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில்கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,பரம்பரை பரம்பரைய ாக எனது குடும்பம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

எனக்கு எப்போதும் தனிப்பட்ட கொடுக்கல் -வாங்கல்கள் எதுவும் கிடையாது மக்களின் பிரச்சினைகளுக்காக அர்ப்ப ணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதே எனது குறிக்கோள. மக்களின் பிரச்சினைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதனைத் தவிர தனிப்பட்ட நோக்கங்கள் எதுவும்எனக்கு கிடையாது என அவர் சுட்டிக்காட்டி ள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி மக்களின் நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டுமெனஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்து ள்ளார். (3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 80 | 60 | 40 | 40 | 40 |
| தக்காளி | 120 | 90 | 120 | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 60 | 40 | 40 |
| கோவா | 120 | 80 | 60 | 80 | 60 | 60 |
| கரட் | 160 | 120 | 100 | 140 | 100-140 | 140 |
| பூசணி | 20 | 30 | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 70 | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 30 | 50 | 50 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 120 | 50-60 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 130 | 120 | 140 | 130 |
| பாகற்காய் | 160 | 140 | 110 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 140 | 80 | 80 | 80-120 | 120 |
| கருணைக் கிழங்கு | — | 60 | — | 120 | — | 70 |
| பயற்றங்காய் | 140 | 180 | 150 | 100 | 140-200 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 140 | 200 | 140 | 180 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 100 | 50 | 50 |
| கறிமிளகாய் | 200 | 100 | 80 | 100 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 200-300 | 400 | — | 400 | 400 | 400 |
| போஞ்சி | — | 200 | 160 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 50 | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 | 40 | 30-50 | 25 |
| தேசிக்காய் | 160-200 | 160 | 130 | 140 | 160 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 200 | 120 | 50 | 140 | 160 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 25 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 375


சாகி சாகித்தியா

**தேவைக்கு மேலே பொருளும் திறமைக்கு மேலே புகழும் கிடைத்து விட்டால் பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமாகத்தான் தோன்றும்.**

தஷா ஜெயா




சியாமினி சங்கர்




ரகு ரகுராம்




தனு தனுசன்




மாது மாதுசன்




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்

(சென்றவாரத்தொடர்ச்சி)

**அப்படிப்பட்டவர்கள் எச்சரிக்கையாக இருக்க வழியுண்டா?**

அவர்களுக்கான சில ஆலோசனைகள் உண்டு. உங்களுக்கு அதிக டென்ஷன் உள்ளதா? கவலை இல்லாத மனிதன் இல்லை.

ஆனால்கவலைகளைச் சுமக்க உங்க க்கு மனப்பக்குவம் இல்லாதிருக்கலாம். அதற்கு நீங்கள் பொறுப்பல்ல. உங்கள் உடல்வாகு, பயந்த சுபாவம், திகில் அடைவது போன் றவர்களுக்கு ஹோமியோபதி தனி அணுகுமுறையை வைத்திருக்கிறது.

சிலருக்கு இழப்பின் காரணமாக நீரிழிவு நோய் வரலாம். உதாரணத்திற்கு பிஸினஸ் லொஸ் திடீரென டென்ஷன் தாங்க முடியவில்லை. சரி செய்ய முடியவில்லையானால் உடலில் வேண்டாத தீமை தரக்கூடிய ஓமோன்களின் உச்சக்கட்ட விளையாட்டுதான் நீரிழிவு நோயை ஏற்படுத்துகிறது. இதற்கு வழக்கமாகத் தரப்படும் மாத்திரைகளைத் தவிர்த்து ஹோமியோபதியில் காரணத்தை அறிந்து மருந்து கொடுக்கப்படுகிறது.

வீட்டில் கணவன், மனைவி இடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்குப் பின்வரும் நீரிழிவு நோய் , தன் குடும்பத்தின் கௌரவக் குறைச்சலில் வரும் நீரிழிவு நோய் என்று இன்னும் பலவித காரணங்களால் வரக்கூடும். இப்படியெல்லாமா இருக்கும் நீரிழிவு நோய் என்று நினைக்கத் தோன்றுகிற தல்லவா? ஆனால் இதில் ஏதாவது ஒரு வகையை சார்ந்தவர்கள்தான் இன்று நீரிழிவு நோயாளியாக இருப்பவர்கள்.

**ஹோமியோபதி மருத்துவத் தில் நீரிழிவு நோய்க்கு என்ன தான் மருந்து?**

நீரிழிவு நோய் உள்ளவர்களை இனிப்பு சாப்பிடாதே என்று சொல்வது அவர்களைச் சிறையிலடைப்பது போல இருக்கிறது என்றார் ஒரு நோயாளி. எனவே இனிப்பு உட்கொள்ளும் வாஞ்சை அதிகம் உள்ளவர்களுக்கு எனத் தனி மருந்து கொடுக்கப்படுகிறது. ஆனால் இதை மற்றவர்களுக்கு பயன்படுத்தலாகாது.


அதேபோல் இனிப்பைக் கண்டாலே வெறுப்பு என்று சொல்லக் கூடியவர்கள் நீரிழிவு நோய் உள்ளதே என்று கேட்கலாம். ஆம் அப்படிப்பட்டவர்களுக்கு அவர்களின் விருப்பம் என்னவென்று அறிந்து அதற்கேற்றவாறு தனி மனிதனின் மருத்துவம் ஹோமியோபதி முறையில் அளிப்பதால் ஹோமியோபதி மருத்துவ முறையில் எந்த பழக்க வழக்கம், சுற்றுச்சூழல், விருப்பு வெறுப்பு என்று மனோதத்துவ முறையில் ஆராய்ந்து ஒவ்வொருவருக்கும் ஒருவித வேறுபட்ட கூட்டு மருந்து என்பதால் எதையும் பொதுவாகக் குறிப்பிட முடியாது.

ஆனால் எல்லோருக்கும் உரிய ஒரேவித மருத்துவம் எது என்றால் இறை பக்தியும் சிறு உடற் பயிற்சியும் தினம் 3 வேளை சிரித்தாலும் போதுமே சிரிக்கணும் சிந்திக்க ணும் சிரிங்க.

**நீரிழிவு நோயின் அறிகுறிகள் என்னென்ன?**

அடிக்கடி சிறுநீர் கழித்தல், காரணம் சொல்ல முடியாத உடல் மெலிவு அல்லது அதிக எடை, அதிக பசி, அதிகமான தாகம் எடுத்தல், சோர்வாக இருத்தல், மங்கலான பார்வை, காலில் எரிச்சல் அல்லது மரத்துப் போதல், மர்மஸ்தானத்தில் அரிப்பு, பாலியல் குறைபாடுகள், பரம்பரைக் காரணம், காயங்கள் ஆறுவதற்குக் காலதாமதம் போன்ற காரணங்கள் தாம் அறிகுறிகள் ஆகும்.

இதில் இனிப்பு அதிகமாகச் சாப்பிடும் போது கால்களில் எரிச்சல் வரும். மேலே கூறிய காரணங்களில் ஏதாவது மூன்று அறிகுறிகள் இருந்தாலும் நீரிழிவு நோய்தான் என்று உறுதியாகச் சொல்லலாம்.




தூங்கி எழுந்தவுடன் கீழ்க்கண் வீக்கம், இது தெளிவடைய 3 மணி நேரம் ஆகும். மேல் கண் வீக்கம் இருந்தால் கல்லீரல் பிரச்சினை, யூரியா பிரச்சினை, கணைக்கால் வீக்கம் வரும்.

**இந்த நோயால் பாதிக்கப்படாமலிருக்க என்ன மாதிரி உணவு முறை மேற்கொள்ள வேண்டும்?**

சீனி அதிகமாக உள்ள நோயாளிகளுக்கு தொண்டை, கால்சதைப் பகுதியில் சின்ன சின்ன புள்ளிகள் உண்டாகும். இதைப் போக்க வெள்ளை மிளகு, சீரகம்நிறைய சாப்பிட வேண் டும். இரண்டையும் பொங்கலில் போட்டு, வாரம் இருமுறை சாப்பிடுவது நல்லது.

நீரிழிவு நோயால் ஆண்மைக் குறைவுவரக்கூடும். ஆண்மைகுறைவு உள்ளவர்கள் கறுப்பு எள்ளை, நெய்யில் இலேசாக வறுத்து (வெடிக்காமல்) பொடி செய்து தினமும் சாப்பிட வேண்டும்.

உடம்பில் கட்டி வந்தால் செம்பு பாத்திரத்தில் 30 துளசி இலை கள் போட்டு அத்துடன் துளி கர்ப் பூரம் சேர்த்து 45 நாட்கள் சாப்பிட்டால் கட்டிகள் மறைந்து விடும். துளசியைப் பல்படாமல் சாப்பிட வேண்டும்.

**எந்த வகையான உணவு வகைகளால் நீரிழிவு நோய் மேலும் அதிகரிக்கும்?**

நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவுகளாவன: உருளைக்கிழக்கு அரிசி, சோளம், கரட், மொச்சை, பீற்றூட், சகல விதமான பருப்புவகைகள், இனிப்பு பண்டங்கள், பிஸ்கட் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும்.

மாம்பழம், வாழைப்பழம், பலாப் பழம், பேரீச்சம்பழம், அத்திப் பழம், திராட்சை முதலான பழங்கள், குளிர் பானங்கள், பழரசங்கள் ஆகி யவை விலக்கப்படவேண்டும். அசைவ உணவு கூடவே கூடாது.




**என்னென்ன உணவு உட்கொள்ளலாம்?**

சேர்க்க வேண்டிய உணவு வகைகளாவன: கத்தரிக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், வாழைப்பூ, முட்டைக் கோஸ், காலி பிளவர், சௌசௌ, கொத்தவரங்காய், கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லி, வெண் டைக் காய், பாகற்காய், சுரைக்காய், வாழைத்தண்டு, பீன்ஸ், காராமணி, கோதுமை, கீரைவகைகள், முளை கட்டிய பயறு வகைகள் போன்றவையாகும்.

நீரிழிவு நோய் தமிழ் மருத்துவத்தில் மது மேகம் என்று அழைக்கப்படுகிறது. பெயரிலேயே நோயின் தன்மை புரிந்து விடுகிறது.

மது எனப்படுவது இனிப்பு எனவும் பொருள்படும். மேகம் என்பது நீர் எனவும் பொருள் கொள்ளலாம். அதிகப்படியான வாயு பதார்த்தங்கள் உண்ப தாலும் மன உளைச்சலாலும் நீரிழிவு நோய் உண்டாகிறது என சித்தர்கள் கூறுகின்றனர்.

இதனைச் சித்தர்கள் முறைப்படி நீர்க்குறி நெய்க்குறி எனும் பரிசோதனையின் மூலம் கண்டறியலாம்.

நோயாளி கழித்த சிறுநீரைச் சுற்றிலும் எறும்புகள் சூழ்ந்திருக்கும் எனத் தமிழ் மருத்துவர்கள் கூறுவார்கள். தற்காலத்தில் இவை அனைத்தும் நடைமுறையில் சாத்தியம் இல்லாத ஒன்று. மருந்துகள் எனப் பார்த்தால் இயற்கை முறைப்படி மூலிகைகள் வழங்குவதே மிகச் சிறந்தது என்று தெரிவித்தார்.

**இந்த நீரிழிவு நோயைச் சித்த மருத்துவத்தால் குறைப்பது எப்படி?**

குறைப்பது மட்டுமல்ல அடியோடு நீக்கவும் முடியும்.

ஆவாரை போன்ற மூலிகைகளை கஷாயம் அல்லது பொடி செய்து தொடர்ந்து உண்டு வந்தால் அதிகபடியான சிறுநீரைக் கழிக்கும் தன்மை வற்றி விடும். நோயின் தன்மை நிச்சயமாகக் குறையும். தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம் பாதுகாப்பானது.

பக்க விளை வுகள் அற்றது. அதிக செலவில்லா தது. நம் வீட்டுக் கொல்லைப் புறத்திலேயே விளையும் மூலிகைகளைக் கொண்டு உலகை அச்சுறுத்தும் மிகப்பெரிய நோயான நீரிழிவு நோயை அடியோடு களையலாம்.

ஆவாரம்பூ பொடியை வெந்நீரில் கலந்து சாப்பிடலாம். ஆவாரம்பூ என்பது நீரிழிவு நோய் ரயிலடியில் தெருவோரங்களின் குப்பை மேட்டில் குத்துச் செடியாக வளர்ந்து கிடக்கும் அதன் முழுச் செடியே பயன்பாட்டிற்கு உரியது. அதனை வெயிலில் வைத்து உலர்த்திப் பொடிப் பொடியாகத் தூள் செய்து கஷாயம் வைத்துக் குடிக் கலாம்.

**இந்த மருந்துகள் உடலுக்குள் செய்யும் வேதியியல் மாற்றம் எப்படி?**

தற்கால மருத்துவ முறைப்படி கணையத்தின் சுரப்பைச் சரி செய்கிறது. சுரக்கொன்றை எனப்படும் குல்மொஹர் பட்டையும் சிறந்தது. மொத்தத்தில் எந்த மரத்தின் பட்டைகளும் மதுமேகத்திற்கு நல்லது தான். பட்டையின் துவர்ப்புச் சுவை வாயுவை குறைக்கும். வாதபித்த நாடியின்மாற்றத்தையும்உடல்உறுப்புகள் செயலிழந்த தன்மையைச் சரி செய்யும்.

சித்த மருத்துவத்தின்படி உடலில் கலந்துள்ள வேண்டாத கழிவுகளை அகற்றினாலே நோய் வராது. நல்ல உணவுப் பழக்கத்தை பின்பற்றி அதிகமாக உணர்ச்சி வசப்படாமல் இருந்தால் மதுமேகம் என்னும் நீரிழிவு நோயைத் தவிர்க்கலாம்.

நம் உடலில் உள்ள செல்களுக் குச் சக்தியைத் தருவது நாம் உண்ணக்கூடிய மாப்பொருளிலிருந்து கிடைக்கக்கூடிய குளுக் கோஸ்தான்.

எதுவாக இருந்தாலும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ் சாகும் என்று நம் முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அதேபோலத்தான் நம்மு டைய உட லில் உள்ள இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகமாகும் போது பிரச்சினைகள் தோன்றுகின்றன. தேவையற்ற குளுக்கோஸ் உடலில் அதி கம் தங்கினால் உடலில் நச்சுத் தன்மை ஏற்பட்டு?நீரிழிவு நோய் உட்பட பல நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

உடலில் ஏற்படக்கூடிய எந்த நோய்க்கும் தானே குணப்படுத்து கின்ற சக்தி இயற்கையாகவே இருக்கின்றது.

அக்குபிரஷர் முறை மூலம் நமது உடல் உறுப்புகளையும் அவற்றின் இயக்கத்திற்குக் காரணமான நாளமில்லா சுரப்பிகளையும் நல்ல நிலையில் நம்மால் வைத்திருக்க முடியும். சுரப்பிகளின் சுரத்தல் தன்மை காரணமாகத் தான் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

**அக்கு பிரஷர் அன்றாடம் செய்வதற்கு மற்றவர் வேண்டுமே? நடைமுறைக்குச் சிரமம் அல்லவா?**

அக்குபிரஷர் மூலம் கிடைக்கும் அந்த சுரத்தல் தன்மையைச் சரி செய்ய நம் உடலில் உள்ள பின் குறிப்பிட்டவாறு வரும் புள்ளிகளைப் படங்களில் உள்ளது போல நீங்களே கையின் விரலின் நுனியைக் கொண்டோ அல்லது ஒரு பொருளைக் கொண்டோ அழுத்தம் தந்து நீரிழிவு நோயிலிருந்து குணமடையலாம்.

அக்குபிரஷர் முறை நோய்களைக் குணமாக்குகிற முறை மட்டுமல்ல நோய்களை வரவிடாமல் தடுக்கும் முறையும் கூட. நல்ல உணவை, சரியான உணவை எடுத்து அக்குபஞ்சர், அக்குபிரஷர் முறை மூலம் நமது உடலைச் சரியாகப் பேணிக் காத்து நோயில்லாத உலகம், மருந்தில்லாத உலகம் படைக்கலாம். ஆரோக்கியமாக வாழலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

இசை விழாக்கள், முத்தமிழ் அரங்குகள், திருக்குறள் மாநாடுகள் என புங்குடுதீவு விழாக்கோலம் பூண்டு மகிழ்ந்த அந்தக் காலங்கள் இப்போது இல்லை.

அது ஒரு காலம்... என்று சொல்லிப் பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு எதையும் சொல்லி விட முடியாது.


விடுதலைப்போராட்டத்திலும் புங்குடுதீவு மண் காத்திரமான பங்கைக் கொண்டிருந்தது. விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பெண்ணெடுத்த ஊர் புங்குடுதீவு என்பதற்குள் வடமராட்சியும் தீவகமும் சம்பந்தக் குடியாகின.

என்ன செய்வது எல்லாம் இழந்த நிலையில் சோகம் ஒன்றுதான் மிஞ்சியது.

கொடூர யுத்தத்தின் கொடுப்பனவுகள் கொஞ்சமல்ல. பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற நினைப்புடையோர்; பார்க்கப் பிடிக்கவில்லை என்று திரும்பிப் பார்க்காதோர்; எதுவா இருந்தாலும் என்னுடல் புங்குடுதீவு மயானத்தில்தான் எரிய வேண்டும் என்று விருப்பம் கொள்வோர் என்ற பட்டியலில், வாழ்ந்தால் புங்குடுதீவில்தான் வாழ்வோம் என்ற நினைப்போடு மீள்குடியமர்ந்தவர்கள் சொற்பமானவர்களே!

ஊர்ப்பற்றோடு மீளக் குடியமர்ந்தவர்கள் பட்ட அவலங்கள் கொஞ்சமல்ல.





தின் பெயரால் அனைவரும் அறியப்பட்ட பெயர். ஆம், சந்திரசேகர சர்மாவின் மகள் சாரதாம்பாள் புங்குடுதீவில் வைத்துக் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

வன்புணர்வின் பின் அந்தக் கொலை நடந்ததாக மருத்துவப் பரிசோதனைகள் உறுதி செய்தன. ஒரு அந்தணக்குடும்பத்திற்கு நடந்த கதிகண்டு கலங்காதார் எவருமில்லை.

படைத்தரப்பின் ஆக்கிரமிப்பில் தீவகம் திணறிக் கொண்டிருந்தபோது புங்குடுதீவில் சாரதாம்பாள் பலியாக்கப்பட்டார். சமூக எதிர்ப்புகள் ஆங்காங்கே எழுகை பெற்றாலும் எழுச்சியை அடக்கும் முயற்சியே வெற்றி பெற்றன என்று கூறலாம்.

இன்றுவரை புங்குடுதீவு எனும் போதெல்லாம் சாரதாம்பாளின் படுகொலை நினைவுகள்

உடல் பனம் காட்டுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட போது புங்குடுதீவு அதிர்ந்து போனது. அந்தக் குக் காரணம் என்ன என்ற கேள்விகள் வார்த்தைகளாக வெளிவருவதற்கு நேரம் எடுக்காமல்

## தமிழினத்தை உலுக்கிய சாரதாம்பாள் படுகொலை



சாரதாம்பாள் அவலத் நிழலாய்ப் பரவுகிறது.

புங்குடுதீவில் நடந்த மிக மோசமான படுகொலையாக சாரதாம்பாளின் கொலை உணரப்பட்ட போது ஈழத்தமிழர்களின் சோக வரலாற்றில் கிருஷாந்தி, ரஜனி, சாரதாம்பாள் என்ற பட்டியல் பருத்துக் கொண்டது.

**புங்குடுதீவில் நடந்த 2ஆவது படுகொலை**

இலைகளாலும் சருகுகளாலும் மூடப்பட்ட நிலையில் சாரதாம்பாளின்



அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று நினைத்த வேளை தர்சினி என்ற இளம் யுவதியின் உடலம் புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தில் வரதீவு என்ற குறிச்சியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப் பட்டது.

தர்சினி என்ற இளம் பெண்ணைக் காணவில்லை என்ற செய்தி புங்குடுதீவு எங்கும் பரவ ஊர்கூடி தேடுதல் நடத்தியது.

சாரதாம்பாளுக்கு நடந்த கொடூரம் தர்சினிக்கும் நடந்துவிடக்கூடாது என்ற ஏக்கத்தோடு தேடுதலைத் தீவிரப்படுத்திய போது வரதீவில் உள்ள கிணற்றில் தர்சினியின் பாதணி ஒன்று மிதப்பது கண்டு பிடிக்கப் பட்டது.

கிணற்றுக்குள் தர்சினியின் செருப்பு மிதப்பதற் கிணற்றில் சோதனை நடத்தப்பட்டபோது கல்லுடன் கட்டப்பட்ட நிலையில் தர்சினியின் உடல் வெளியில் எடுக்கப் பட்டது.

ஓ! புங்குடுதீவில் நடந்த இரண்டாவது கொலை. அதிலும் இளம் பெண்களின் இரண்டாவது மர்ம மரணம்.

தர்சினியின் மரணம் ஏற்பட்டபோது புங்குடுதீவில் வாழமுடியுமா? அப்படி வாழ்வதாக இருந்தால் யார் பாதுகாப்பு? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைப்பதற்கு முன்னதாக நகுலா என்ற புங்குடுதீவைச் சேர்ந்த இளம் ஆசிரியை புங்குடுதீவுக் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப் படுகிறார்.

(22.05.2015 தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதிக்கு 19ஆவது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கோ பூச்சியம்


19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம் ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை மேற்கொண்டும் பயன்படுத்தமுடியாது. 1987 இல் மேற்கொண்டது போல் வடக்கு கிழக்கு இணைப்பை மேற்கொள்வதற்கோ அல்லது இந்தியாவுடன் ஒப்பந்தமெதனையும் செய்துகொள்ளவோ முடியாது. 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதும் அனைத்து அதிகாரங்களும் பாராளுமன்றத்திடம் வந்துவிடும். அத்துடன் தமிழர்களுக்கு சாதகமான எந்த மசோதாவும் நல்லவிதமான கூடுதல் அதிகாரத்துடனேயே பாராளுமன்றில் ஏற்றுக் கொள்ளப்படலாம். போர்க்காலத்தில் இடம்பெற்றது போன்று இழுத்தடிப்பிற்கான ஒரு சாட்டாக இது ஆகிவிடும். இந்தவிதமான காலகட்டத்தில் சிங்கள மயப்படுத்தல், பௌத்தமயப்படுத்தல், இராணுவ மயப்படுத்தல் மற்றும் காணி அபகரிப்பு போன்ற ஏற்கனவே இடம்பெற்றுவந்த விடயங்களின் எஞ்சிய அம்சங்களும் வடக்கு கிழக்கு பகுதிகளில் பூர்த்தியாக்கப்பட்டுவிடும். என்னவிதமான ஒரு தந்திரம்!

இந்தவிதத்தில் போர் முடிவடைந்த உடனேயே முன்னாள் ஜனாதிபதி கூறிய வெற்றித் திருவாசகம் நேர்மையானதே என்று கூட நாம் கூறிவிடலாம். 3 வருடங்களுக்கு முன்னர் சிறுபான்மையினர் என்ற சொற்பிரயோகத்தை தாம் எமது அகராதியிலிருந்தே அகற்றிவிட்டோம். அவர் திரும்பத் திரும்பக் கூறும் வாசகமாகவே இது இருக்கிறது. எது எப்படியோ இது வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்களது மட்டுமல்லாது மலைநாட்டுத் தமிழ்மக்களதும் எதிர்கால நன்மைக்கான ஒரு அறிகுறியாக மட்டும் தெரியவில்லை.

### 13ஆவது திருத்தம்

13ஆவது திருத்தச்சட்டம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக ஏற்கனவேயுள்ளது. அப்படியிருக்கும்போது தற்போதைய அரசு அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏன் தாமதிக்கிறது-தயங்குகிறது. காலம் சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மகள், முன்னாள் ஜனாதிபதியாகவுமிருந்த அவர் எதற்காக ஏன் இப்போது மட்டும் திடீரென சமஷ்டி (Federalism) பற்றிப் பேசுகிறார். 19ஆவது திருத்தம் போலவே அவர் இப்போது பேசுகின்ற சமஷ்டிக்கான மசோதாவையும் பாராளுமன்றத்தின் பாரிய ஆதரவுடன் நிறைவேற்றிக் கொள்ள முடியுமா? இலங்கையில் சமஷ்டி ஆட்சி முறை பற்றிய மசோதா ஒன்று இருக்குமானால் இலங்கையின் தற்போதைய நிலையில் பல கேள்விகளையும் அது எழுப்புவதாயிருக்கும். தென்பகுதியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவு அதற்கு கிடைத்திருக்குமா? இந்தவிதமான சமஷ்டி அமைப்பு முறையினுள் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தக் கூடியதாயிருக்குமோ?

தமிழர்களாகிய நாம் விசேடமாக பாராளுமன்ற தமிழ்ப்பிரதிநிதிகள் ஆகாசக் கோட்டைகளை கட்டுபவர்களாகவே இருக்கிறோம். சமஷ்டி பற்றிய இனிய வார்த்தைகளை எஸ். டபிள்யூ. ஆர்.டீ.






பண்டார நாய க்கவின் மகள் கூறக் கேட்பதற்குக் காத்திராமல் 13ஆவது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலைக்கோரி இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்க எமது

டி.பண்டாவினது மகளது கேலிக்குரிய ஒரு பகிடியாகவேதான் இருக்கும்.

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் 19ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்து அதனை நிறை

**தென்பகுதிக்கு 19 ஆவது திருத்தம் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கோ பூச்சியம் எனும் தலைப்பில் சண்டே லீடர் பத்திரிகையில் எஸ்.வி. கிருபாகரன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

தமிழ் பிரதிநிதிகளால் முடியாதா? 13ஆவது திருத்தம் ஏற்கனவே இலங்கை அரசியலமைப்பின் ஒருபகுதியாகவே இருக்கிறது. ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் (UNHRC) அனைத்துத் தீர்மானங்களிலும் இந்த 13 ஆவது திருத்தம் உள்ளடக்



கப்பட்டேயுள்ளது.

தற்போதைய அரசுங்கூட காலத்தை இழுத்தடிக்கும் முறையையே தொடர்வதாகத் தெரிகிறது. இந்த அரசோ அல்லது அமைச்சரவையோ அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் அதிகாரத்திற்கு வருவது நிச்சயம்மல்ல. அடுத்த பாராளுமன்ற தேர்தலினுள் இதே அரசுதான் தொடர்ந்தும் பதவிக்கு வரும் நிலையிலும் இனப்பிரச்சினை விடயத்தில் அவர்கள் என்ன செய்து விடப்போகின்றனர்?

13ஆவது திருத்தமோ சமஷ்டி ஆட்சி முறை பற்றிய மசோதாவோ எதுவாக இருப்பினும் அவர்களது நிலைப்பாடு முன்னையது போன்றதாகவே இருக்கும். 13ஆவது திருத்தமோ சமஷ்டி ஆட்சி முறை மட்டிலான மசோதாவோ எதுவென்றாலும் முன்னைய நிலைப்பாடு மாறப்போவதில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றை அறிந்திருக்கும் எவருமே எந்தவொரு விடயமும் முற்றிலுமாக நிறைவேற்றப்பட்டாலொழிய மற்றும்படி அதனை ஒருபோதும் நம்பப் போவதில்லை. இந்த 13ஆவது திருத்தம் 1987 இல் இருந்தே இலங்கை அர சியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது.

### சமஷ்டி என்பது இலங்கையில் ஒருகேலிக்கூத்தே

சமஷ்டி ஆட்சி முறைக்கு ஒருபோதுமே இடமில்லாத இலங்கையில் அதனடிப்படையில் புதிய அரசியல் தீர்வொன்றினைப் பெற்றுவிடலாமென்ற கூற்று [illegible] த்தனம் கொண்ட [illegible]

வேற்ற முடியுமானால் 13ஆவது திருத்தத்தினை முழு ஆதரவுடன் நிறைவேற்றத் தடையாயிருப்பது என்ன?

இன்றோ அல்லது பாராளுமன்றத் தேர்தல் முடிவுற்ற பின்னரோ கூட இந்தப்பிரச்சினை தொடர்ந்தும் இருக்கவேதான் போகிறது. கடந்த காலத்திலும் இனப் பிரச்சினை தீர்வு மட்டில் மேற்கொள்ளப்பட்ட பண்டா-செல்வா, டட்லி-செல்வா மற்றும் சந்திரிகாவுடன் ஏனைய வேறு ஒரு சிலர் மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் கதி என்னவாகிற்று என்பதை இன்றும் நாம் மறந்து விட வில்லை.

எனவே சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழர்கள் தமது அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான சரியான தருணம் இதுவேதான் எனலாம். இந்தியாவிற்கும் இதிலொரு பொறுப்புள்ளது. பாராளுமன்றத் தேர்தல் முடியும்வரை காத்திராமல் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையில் இப்போதே நாம் இறங்க வேண்டாமா? தற்போதைய அரசோ எதிர்காலத்தில் வரவிருக்கும் அரசோ முன்னாள் ஜனாதிபதி மகிந்த 13 ஆவது திருத்தத்திற்கும் மேலதிகமாக (13+) தமிழர்களுக்கு வழங்க இருப்பதாக கூறிய அளவிற்கு தாராள மனம் படைத்தவர்களாக இருக்கும் ஓர் நிலையில் 13ஆவது திருத்தத்திற்கும் மேலான சிறந்தவோர் தீர்வினையும் தரக் கூடும்.

முடிவாகக் கூறப்போனால் தென் இலங்கையின் அனைத்து அரசுகளாலும் ஒவ்வொரு அரசியல்வாதியாலுமே தமிழ்மக்கள் காலம்காலமாய் ஏமாற்றப்பட்டு வந்ததே உண்மையாகும். அண்மித்த எதிர்காலத்திலோ அதற்குப் பின்னரோகூட இதுவேதான் தொடர்ந்தும் இடம்பெறுவதாயிருக்கலாம். இலங்கை யின் நடைமுறை அரசியலுக்கு பரீட்சயமாகியிருக்கும் எவருமே சிங்கள அரசியல்வாதிகளின் போலி வேடதாரித்தனத்தை நன்கு அறிந்தவர்களாகவேயுள்ளனர். இந்த 13 ஆவது

திருத்தச்சட்டமாவது குறைந்தளவிலான ஓர் சிறந்த தீர்வாகவே இருந்திருக்குமென்பதுடன் இது போன்ற பொன்னான ஏனைய வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களையும் தவறவிட்ட பல தருணங்களையிட்டு நாம் மனம் வருந்தவேண்டிய நாளும் வரக்கூடும்.

அரசியல்தீர்வுகள் மட்டில் பொய்யான வாக்குறுதிகள் வழங்கும் போலித்தனங்கள் சம்பந்தமான மோசமான நாடுகளில் இலங்கையே உலகில் முன்னணி வகிக்கிறது. வேறுவார்த்தைகளில்சொல்வதானால் மீள் இணக்கப்பாடு மற்றும் வாக்குறுதிகள் போன்றவற்றை மீறுவது போன்றவற்றில் அதனது சாதனைப்பட்டியல் மிக நீண்டது.

இலங்கையின் ஜனாதிபதி போன்ற மிக முக்கிய தலைமைப் பதவி வகிக்கும் உயர் அந்தஸ்திலுள்ள அதிமுக்கிய பிரமுகர்கள் பயன்படுத்திய வாய்ச்சாதுரியமிக்க சொற்பதங்கள்:

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2009 இல் கூறியது**

"சிறுபான்மையினர் என்ற பதத்தையே எமது சொல் அகராதியிலிருந்து நாம் அகற்றியுள்ளோம்." ஸ்ரீஜெயவர்த்தனபுர- கோட்டை பாராளுமன்றத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்துப் பேசிய போது (மே-19, 2009) மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினையின் அடிப்படையில் கூறிய முக்கிய கூற்றே இது.

"இற்றைக்கு 3 வருடங்களுக்கு முன்னரே சிறுபான்மையினர் என்ற சொல்லை எமது சொல் அகராதியிலிருந்து நாம் அகற்றிவிட்டோம். இனிமேலும் எமது நாட்டில் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலேயினர் போன்ற ஏனைய சிறுபான்மையினர் எனப்படக் கூடிய சிறுபான்மை மக்கள் இல்லை. இந்த நாட்டில் இருபான்மையான மக்களே இருப்பர். நாட்டை நேசிப்போர் ஒருபான் மையினர் மற்றொருபான்மையினர் தாம் பிறந்த இந்த மண்ணை நேசியாத சிறு குழுக்களால் அமை ந்திருக்கும்ஏனையோராவர். நாட்டினை நேசியாத மிகவும் சொற்பமான எஞ்சிய ஏனையோரே இவர்கள்." (பேச்சின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி

**ஜெனரல் சரத் பொன்சேகா**



**2008 இல் கூறியது.**

"இந்த நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது என்ற நம்பிக்கை எனக்குண்டு." (நஷனல் போஸ்ட்- கனடா-செப்.23,2008)

"இந்த நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது என்ற நம்பிக்கை எனக்குண்டு. இருப்பினும் இங்கு எம்முடன் கூடவே வாழும் சிறுபான்மை சமூகங்களும் உண்டு. இவர்களை எமது மக்களாகவே நாம் நடத்துகின்றோம். நாட்டின் 75 வீதமான மக்களாகிய நாமே பெரும்பான்மையான மக்களும் நாட்டினை எவருக்கும் ஒருபோதுமே விட்டுக் கொடாது பாதுகாக்கும் உரிமையையும்கொண்டவர்கள். எம்முடன் ஏனைய மற்றவர்களும் இந்நாட்டில் வாழலாம். எமது தேசம் பலம் வாய்ந்த ஒரே தேசம். நாம் சிறுபான்மையினர் என்ற ஒரே காரணத்தை ஏதுவாகக் கொண்டு தமக்குத் தேவையற்றதை தமக்கென அவர்கள் கோர முடியாது."

(நேர்காணலின் ஒருபகுதி- ஸ்ருவாட் பெல்- நஷனல் போஸ்ட், கனடா-திங்கள் செப். 22, 2008)

**ஜனாதிபதி குமாரதுங்க 2005 இல் கூறியது**

"சிறுபான்மை சமூகத்தினர் எமது நாட்டின் சொந்தக்குடிகளல்லர். சிறுபான்மையினராக இருந்த தமிழர்களே தமக்கு தனியான ஓர் நாட்டினைக் கோருகின்றனர். அண்மையில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியின் போது அவர் இவ்விதம் கூறியுள்ளார்." (பேட்டியொன்றின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா)

**ஜனாதிபதி ரி.பி. விஜயதுங்க (மே-1993- நவம். 1994) கூறியது**

"சிங்களவர் என்ற மரங்களில் பற்றிப்படரும் கொடி போன்றவர்களே சிறுபான்மையினர்கள் ஆவர் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக அப்போதிருந்த ரி.பி.விஜயதுங்கவின் கூற்றாக இருந்தது." ( அவரது பேச்சின் குறிப் பிடத்தக்க ஓர் பகுதி

**ஜனாதிபதி ஜே.ஆர். ஜெய வர்த்தன (பெப்.1978- ஜன.1989)**

"தமிழ் மக்கள் பற்றிய கருத்துக்களையிட்டு நான் கவலைப்படவில்லை. இப்போது அவர்களையிட்டு நாம் சிந்திக்கமுடியாது. அவர்களது உயிர் -வாழ்க்கை பற்றியோ அல்லது அவர்களது கருத்துக்கள் பற்றியோ கூட நம்மால் சிந்திக்கவேமுடியாது. வடக்கிற்கு எவ்வளவுக்கெவ்வளவு அழுத்தங்களை, நெருக்கடிகளைகொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு சிங்கள மக்களும் இங்கே மேலும் மேலும் சந்தோஷப்படுவார்கள்.



உண்மையில் தமிழர்கள் சரணடையு மட்டும் அவர்களை நான் பட்டினி போட்டாலுங்கூட சிங்கள மக்கள் சந்தோசப்படவே செய்வார்கள்."

(1983 இல் டெய்லிகிராப் UK பத்திரிகைக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வழங்கிய பேட்டியொன்றில் தமிழர் பற்றிய குறிப்பிடத்தக்க ஓர் பகுதி

(முற்றும்)

தமிழில்:-யோகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால்
தம்பி சண்டப்பிரசண்டன்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சமூக நீதிக்காக குரல் கொடுங்கள்

யுத்தத்திற்குப் பின்பான தமிழர்களின் வாழ்வியல் எப்படியாக உள்ளது என்று ஆராயும்போது பிரச்சினைகள் இடம் நகர்ந்துள்ளனவே தவிர பிரச்சினைகள் தீரவில்லை என்ற உண்மை உணரப்படும்.

யுத்தத்தால் அவலப்பட்ட மக்கள் இப்போது வேறு வகையான அவலங்களை சந்தித்துள்ளனர். யுத்த காலத்திலும் அதனை அடுத்த காலப்பகுதியிலும் யுத்த அனர்த்தத்தின் தாக்கங்கள் இருந்து வந்துள்ளன.

எனினும் இப்போது எங்கள் இளைஞர்களின் நடத்தை சார் விடயங்கள் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. பொதுவில் யுத்தம் நடந்த பூமியில் சந்தர்ப்ப சூழல்களாலும் திட்டமிடப்பட்ட ரீதியிலும் சமூகப் பிறழ்வு சார் பிரச்சினைகள் எழுகை பெறுவது வழமை. இது யுத்தம் நடந்து முடிந்த நாடுகளில் உணரப்பட்ட அனுபவம். இந்த அனுபவத்தை எங்கள் மண்ணும் வழங்கத் தவறவில்லை.

இளைஞர்களிடையே சர்வ சாதாரணமாகிப் போன மதுப் பாவனை, புகைத்தல் என்பன குடும்ப கட்டமானங்களை உடைத்து எறியக்கூடியவை. இத்தகையதொரு சூழமைவில் போதைப் பாவனை நம் மண்ணில் மலிவுறத் தொடங்கிற்று. இதன் காரணமாக சமூக அனர்த்தங்கள் மலிந்து போயிருப்பதை அவதானிக்க முடிகிறது.

பொதுவில் பெண்களுக்கான அதிலும் குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கான பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக இருப்பதைக் காணமுடிகிறது. பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லுகின்ற பெண்பிள்ளைகளை பின் தொடர்கின்ற இளைஞர்களின் தொல்லையால் படிப்பு வேண்டாம் வீட்டில் இருந்தால் போதும் என்ற பழைய நடைமுறைகளை அமுல்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் பெற்றோர்கள் உள்ளனர்.

இதுதவிர இரவு எட்டு மணிவரை இயங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்களின் சமூகப் பொறுப்பற்ற செயல்களால் பெற்றோர்கள் ஏங்கி இடிவிழுந்து போயுள்ளனர். இரவுவேளையில் கற்பிக்கப்படுகின்ற தனியார் கல்வி முறைக் கலாசாரத்தால் பெற்றோர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இரவு நேரத் தனியார் கல்வி நிறுவன கற்பித்தல் முடிந்த பின் துவிச்சக்கரவண்டியில் அல்லது மோட்டார் சைக்கிளில் தனது பெண் பிள்ளையைக் கூட்டிச் செல்லும் ஒரு தந்தையின் மனநிலையை உணர்வது யார்? கூட்டாக மதுபோதையில் வருகின்ற இளைஞர் குழுமத்தின் சேட்டைத் தொந்தரவில் இருந்து தனது பிள்ளைக்கான பாதுகாப்பை உறுதி செய்வதில் அந்த அப்பாவித் தந்தை அடையும் ஏக்கம் சாதாரணமானதன்று.

என்ன செய்வது? பணம் ஒன்றை மட்டுமே இலக்காகக் கொண்ட சமூக உருவாக்கத்தின் பொறுப்பற்ற செயல்களால் எத்தனையோ துன்பங்களை அனுபவிக்க வேண்டி உள்ளது.

எதுவாயினும் ஒரு காலத்தில் பெண்களுக்கான பாதுகாப்பை சமூகமே பொறுப்பு எடுத்திருந்தது. ஒரு பெண் பிள்ளை மீது இளைஞன் ஒருவன் சேட்டை செய்வானாயின் அங்கே கூடியிருப்பவர்கள் திரண்டு அவனைத் தண்டிப்பர்.

இந்தச் சமூகப் பொறுப்பு பெண்பிள்ளைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்வதோடு குறித்த இளைஞர்களை வழிப்படுத்துவதாகவும் இருந்தது. ஆனால் இன்று எது நடந்தாலும் நமக்கு என்ன? என்ற சமூகத்தின் பொறுப்பற்ற தன்மை எல்லோரையும் பாதிப்பதால் சமூக நீதியை–சமூகப் பொறுப்பை நிலைநாட்ட நாம் அனைவரும் குரல் கொடுப்பது கட்டாயமானதாகும்.

# நாங்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அனைத்தையும் பார்த்துக் கொள்கிறோம்

## சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

காவல்துறை நிதி குற்ற புலனாய்வு பிரிவு நிறுவ மும்முரமாக செயற்பட்ட நாங்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்த பின்னர் இதற்கான விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்ஊடகவியலாளர் சந்திப்பில் எதிர்க் கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவும் கலந்துக்கொண்டுள்ளார்.

காவல்துறை நிதி குற்ற புலனாய்வு பிரிவு தொடர்பாக பிரதமரை மாத்திரம் இலக்கு வைத்து குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லையா என ஊடகவியலாளர்கள் வினவிய போது அதற்கு பதில் அளித்த அவர், ஜனாதிபதி இது குறித்து விழிப்புணர்வுடன் உள்ளார்.

குறித்த காவல்துறை நிதி குற்ற புலனாய்வு பிரிவு தொடர்பில் ஜனாதிபதி மக்களுக்கு வாக்கு கொடுத்துள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

மேலும் நாம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் இவ் காவல்துறை நிதி குற்ற புலனாய்வு பிரிவு நிறுவுவதற்கு முன் நின்றவர்கள் அதன் விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பில் பிரதமர் பொது நலவாய அமைப்பின் ஆதரவை நாடுவது அவசியமற்ற ஒரு விடயம் எனவும், இது இந்நாட்டு நீதிதுறைக்கு அவமானப்படுத்தும் ஒரு செயலாகும் என இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் எதிர் கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலமைப்பிற்கமைய வெளிநாட்டு அறிவுரை பெற்றுக் கொளவது இந்நாட்டு நீதித்துறையை அவமதிப்பதோடு பயத்தை ஏற்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகுமென அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான ஒரு தீர்மானம் குறித்தும், காவல்துறை நிதி குற்ற புலனாய் பிரிவு தொடர்பிலும் பிரதமர் தற்போது மனவேதனையடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவை எதிர் வரும் செப்டெம்பர் மாதம் வரையிலேனும் செயற்படுவது குறித்து நம்பிக்கை இல்லை என சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (செ-11)

## மைத்திரியின் சாதனை ஜெனிவாவில் வெளியிடப்படும்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக செயற்பட்ட போது சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை புகைப்படங்களை வெளியிடுவது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய ஆவணமொன்றை, 68ஆவது உலக சுகாதார மாநாட்டின்போது வெளியிட சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உலக சுகாதார மாநாடு, நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியது. இம் மாநாட்டில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டுள்ளனர்.

சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை புகைப்படங்களை வெளியிடுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உட்பட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (செ-11)

# நாட்டின் முழுக் கடன்தொகை ரூ.8 ஆயிரத்து 999 பில்லியனாக அதிகரிப்பு

## மகிந்த அரசினாலேயே இந்நிலை-ரவி

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தினால் பெறப்பட்ட வரையறையற்ற கடன்கள் காரணமாக நாட்டின் முழு கடன் தொகை ரூபாய் 8 ஆயிரத்து 999 பில்லியனாக அதிகரித்துள்ளது.

நிதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனை தெரிவித்தார்.

கடந்த 2005-ம் ஆண்டில் ரூபாய் ஆயிரத்து 784 பில்லியன் ஆகவே இந்த கடன்தொகை காணப்பட்டது.

எனினும் கடந்த 10 வருடங்களில் ரூபாய் 7 ஆயிரத்து 215 பில்லியன் கடன்தொகை கடந்த அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரச வங்கிகளின் செயற்பாடுகளை தனியார் மயப்படுத்த திட்டமிட்டு வரப்படுவதாக தெரிவிக்கும் கருத்துக்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் மூடப்பட்ட பிரமுக வங்கியின் 8 ஆயிரத்து 200 வைப்பீட்டாளர்களின் வைப்பீட்டு நிதியை மீளகையளிக்கும் முதல் கட்ட நடவடிக்கைகள் நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தாமதமடைந்து வந்த குறித்த நிதி வழங்கல் நடவடிக்கைகள் பல கட்டங்களாக முன்னெடுக்கப்பட வுள்ளன எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (செ-11)

# கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து கண்டன நிகழ்வு நடைபெறவுள்ளது. (3-7)

# மாணவி படுகொலை கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலையை கண்டித்து நாளை காலை 10 மணிக்கு மக்கள் சக்தி அமைப்பின் தலைமையில் நல்லூர் பின் வீதியில் கண்டனப் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்கள் வர்த்தகநிலையங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் எம்.குமாரவேல் கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

# ஆசிரிய ஆலோசகர் விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கல்வி வலயங்களில் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர்சேவை 1, 2-1 ஆகிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களையும் தகைமைகளையும் நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளரூடாக எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மனிதனின் மகிமையை (Dignity) இந்து மதத்தைப் போல் வேறு எந்த மதமும் இவ்வளவு உயர்வாகக் கூறவில்லை. அதேவேளையில் உலகில் உள்ள எந்த மதமும் இந்து மதம் செய்வதுபோல் ஏழைகள் மற்றும் தாழ்ந்தவர்களின் கழுத்தை நெரிப்பதும் இல்லை. குற்றம் மதத்தினுடையதல்ல. மாறாக உட்கருத்தைப் பாராமல் வெளி ஆசாரத்தைப் பிரமாதப்படுத்துபவர்களை, அவநம்பிக்கை மிக்கவர்களை, வஞ்சகப் போலிகளை அந்தக் குற்றம் சாரும் என்பதை இறைவன் எனக்குக் காட்டியுள்ளார்.

வேலை செய்யுங்கள், வேலை செய்யுங்கள், வேலை செய்யுங்கள் இதுவே மூலமந்திரம்.

ஒருமதம் பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால் அது உத்வேகம் மிக்கதாக இருக்கவேண்டடம். அதேவேளையில் அதில் உட்பிரிவுகள் பெருகிக்கொண்டே போகின்ற அபாயத்தையும் தடுக்க வேண்டும்.

எதற்கெடுத்தாலும் ஏன் என்று கேட்டுக்கொண்டிருப்பதல்ல, வேலை செய்வதும் அதிலேயே மடிவதும்தான் நாம் செய்யவேண்டியது. எல்லையற்ற உற்சாகத்துடன் திகழுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். கிரிக்கெட் அணிகள் ஒரு கண்ணோட்டம்

ஐ.பி.எல். போட்டியில் நேர்த்தியாக விளையாடும் அணிகளில் முதன்மையானது சென்னை சுப்பர் கிங்ஸ். டோனி தலைமையிலான இந்த அணி 2 முறை (2010, 2011) கோப்பையை வென்றுள்ளது. 3 முறை 2ஆவது இடத்தை பிடித்தது. இதுவரை நடந்த அனைத்து ஐ.பி.எல். போட்டியிலும் அரை இறுதி மற்றும் 'பிளேஆப்' சுற்றுக்கு நுழைந்த ஒரே அணியாகும்.

இந்த தொடரில் தொடக்கத்தில் இருந்தே சென்னை அணி சிறப்பாக விளையாடி வருகிறது. 9 ஆட்டத்தில் வெற்றி பெற்றது. 5 போட்டியில் தோல்வியை தழுவியது. ராஜஸ்தான், கொல்கத்தா, ஐதராபாத், மும்பை, டெல்லி அணிகளிடம் தோற்றது. பட்டிங் மற்றும் பவுலிங்கில் சமபலத்துடன் திகழ்கிறது.

புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தை பிடித்ததன் மூலம் இறுதிப்போட்டியில் நுழைய 2 முறை வாய்ப்பு இருக்கிறது.

ரோகித்சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி தொடக்கத்தில் 4 ஆட்டத்தில் தொடர்ச்சியாக தோற்றது. அதில் இருந்து மீண்டு தொடர்ச்சியாக 5 போட்டியில் வெற்றி பெற்றது. கடைசி 'லீக்' ஆட்டத்தில் ஐதராபாத்தை வீழ்த்தியதன் மூலம் 'பிளேஆப்' சுற்றுக்கு முன்னேறியது. 2ஆவது இடத்தை பிடித்ததன் மூலம் இறுதிப்போட்டிக்கு நுழைய சென்னையை போல 2 முறை வாய்ப்பு பெற்றுள்ளது. 'பிளேஆப்' முறை 2011இல் அறிமுகம் செய்யப்பட்டது.சென்னையை போலவே மும்பை அணி யும் 5ஆவது முறையாக 'பிளேஆப்' சுற்றுக்கு முன்னேறி உள்ளது. 2011ஆம் ஆண்டு சம்பியனான மும்பை அணி சமபலத்துடன் திகழ்கிறது.

சிறந்த வீரர்களை கொண்ட பெங்களூர் அணி இதுவரை ஐ.பி.எல். கோப்பையை வென்றது இல்லை. 2011ஆம் ஆண்டுக்கு பிறகு தற்போது தான்'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெற்று உள்ளது. 2 முறை இறுதிப்போட்டியில் தோல்வி அடைந்த அந்த அணி தற்போது 3ஆவது இடத்தை பிடித்து முன்னேறி உள்ளது.

எலிமினேட்டர் ஆட்டத்தில் விளையாடுவதால் தோல்வி அடைந்தால் வெளியேற்றப்படும். சிறந்த பட்டிங் வரிசையை கொண்ட அணியாகும். கடந்த முறை மயிரிழையில் 'பிளேஆப்' வாய்ப்பை இழந்த ராஜஸ்தான் ரோயல்ஸ் இந்த முறை கொல்கத்தாவை வீழ்த்தியதன் மூலம் 4ஆவது இடத்தை பிடித்து வாய்ப்பை பெற்றது.

அறிமுக ஐ.பி.எல். போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற அந்த அணி இந்த தொடரில் தொடக்கத்தில் ஆதிக்கம் செலுத்தியது. தொடர்ச்சியாக 5 ஆட்டத்தில் வெற்றி பெற்றது. பின்னர் சரிவு ஏற்பட்டது. அதன்பிறகு மீண்டது கொல்கத்தாவுக்கு எதிரான கடைசி 'லீக்' ஆட்டத்தில் அதிரடியாக விளையாடியது. 2ஆவது முறையாக 'பிளேஆப்' சுற்றில் ஆடுகிறது. (க)


# ரோஜர்பெடரரை வீழ்த்தி ஜோகோவிக் சம்பியன்



இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் நம்பர் 1 வீரராக உள்ள நோவன் ஜோகோவிக் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தர வரிசை பட்டியலில் 2 ஆவது இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் ஜோகோவிக் மோதினார். இதில் 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் பெடரரை வீழ்த்திய ஜோகோவிக் நான்காவது முறையாக இத்தாலி ஓபன் போட்டியில் பட்டம் வென்றார். அதேபோல் தொடர்ந்து 22ஆவது வெற்றியையும் பெற்று சாதனை படைத்தார்.

இப்போட்டியில் 15 முறை கலந்து கொண்ட போதும் ஒருமுறைகூட பெடரர் பட்டம் வெல்லவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (க)



# ரொனால்டோவை கழற்றிவிட்ட மொடல் அழகி இகினா ஷாய்க்

பிரபல காற்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவை விட்டு அவரது காதலி மற்றும் மொடல் அழகியான இகினா ஷாய்க் பிரிந்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போர்த்துக்கல் காற்பந்து அணியின் வீரர் ரொனால்டோ, கடந்த 5 ஆண்டுகளாக தீவிரமாக இகினா ஷாய்க் என்ற 29 வயது மொடல் அழகியை காதலித்து வந்தார். போட்டி இல்லாத நேரங்களில் இருவரும் பல நாடுகளுக்கு சென்று ஜாலியாக பொழுதை கழித்தனர்.

மேலும், இருவரும் விரைவில் திருமணம செய்து கொள்வார்கள் எனவும் ரசிகர்கள் எதிர்பார்த்தனர். இந்நிலையில் கடந்த ஓராண்டாக இருவர்களுக்கு இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. இவர்கள் பிரிந்து விட்டதாகவும் அவ்வப்போது செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன.

மேலும், இருவரும் தீவிரமாக காதலித்த போது இகினாவின் செல்போனுக்கு பெண்கள் செயதி அனுப்பினர். அதில் ரொனால்டோ வுக்கு தங்களுடன் தொடர்பு இருப்பதாக தெரிவித்து இருந்தனர்.

இதைத்தொடர்ந்து ரொனால்டோவின் செல்போனை இகினா சோதனை செய்தபோது அந்த தகவல் உறுதியானது. இதனால் இகினா தனது காதலர் ரொனால்டோவை விட்டு நிரந்தரமாக பிரிந்து விட்டதாக கூறப்படுகிறது.

மொடல் அழகி இகினா ஷாய்க், தற்போது நடிகர் பிரட்லி ஹூப்பருடன் சுற்றி திரிவ[illegible] தகவல்கள் வெளியாகியுள்ளன. (க)



# இத்தாலி ஓபன் டென்னிஸ்; மரியா ஷரபோவா சம்பியன்

இத்தாலி ஓபன் டென்னிஸ் ரோம் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று பெண்கள் ஒற்றையருக்கான இறுதிப்போட்டி நடைபெற்றது.

இதில் 3ஆம் நிலை வீராங்கனையான மரியா ஷரபோவா 10ஆம் நிலை வீராங்கனையான ஸ்பெயினைச் சேர்ந்த கார்லா சுவாரெசை எதிர்கொண்டார். இதில் 4-6, 7-5, 6-1 என ஷரபோவா வெற்றி பெற்று 3ஆவது முறையாக இத்தாலி ஓபன் சம்பியனை கைப்பற்றினார்.

முதல் செட்டை 4-6 என இழந்த ஷரபோவா 2ஆவது சுற்றில் சுதாகரித்துக்கொண்டு விளையாடினார். இருந்தாலும் அந்த செட்டை கடும் போராட்டத்திற்குப் பிறகு 7-5 என கைப்பற்றினார்.

இதனால் வெற்றியை நிர்ணயிக்கும் 3ஆவது செட்டை கைப்பற்ற இரண்டு பேரும் கடுமையாக போராடுவார்கள் என்று எதிர்பார்த்த நிலையில் ஷரபோவா 6-1 என எளிதில் கைப்பற்றி வெற்றி பெற்றார்.

இதற்கு முன் 2011, 2012 ஆம் ஆண்டு இத்தாலி ஓபன் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை மீறி அனுஷ்காவை சந்தித்து கட்டியணைத்த கோலி

கிரிக்கெட் விதியை மீறி விராட் கோலி, அனுஷ்காவை சந்தித்துள்ளமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூரு சின்னசாமி அரங்கில் நடைபெற்ற 55ஆவது லீக் ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் செலஞ்சர்ஸ் அணி, டெல்லி டேர் டெவில்ஸ் அணியை எதிர்கொண்டது.

இப்போட்டியின் இடைநடுவே கடும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதனையடுத்து அரங்குக்கு திரும்பிய விராட் கோலி பார்வையாளர் அரங்கில் அமர்ந்திருந்த தனது காதலி அனுஷ்கா சர்மாவை சந்தித்து உள்ளார். இதன்போது அப் பகுதியில் யுவராஜ் சிங் மற்றும் தினேஷ் கார்த்திக்கும் இருந்துள்ளனர்.



கிரிக்கெட் விதிப்படி போட்டி முடியும் வரை அதாவது இறுதி பந்து முடியும் வரை வீரர்கள் தங்களுக்கு உரிய ப்குதியில் இருந்து சென்று வேறு ஒருவரை சந்திக்க கூடாது. மேலும் ரசிகர்களுடன் நேரடியாக சந்தித்து பேச முடியாது.

இந்நிலையில் விராட் கோலி அனுஷ்காவை சந்தித்தமை மைதான திரையிலும் ஒளிபரப்பானது.

இது ஊழல் தடுப்பு பாதுகாப்பு நெறிமுறைகளை மீறிய செயலாகும் எனவும் மழையால் ஆட்டம் முடிவுக்கு வந்து இருந்தால் பரவாயில்லை முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே ஒரு அணியின் எதிர்கால அணித் தலைவர் இவ்வாறு செய்தது முறையான விடயம் இல்லை எனவும் ஊழல் மற்றும் பாதுகாப்பு சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அணியின் தலைவர் என்ற வகையில் அவருக்கு விதிமுறைகள் தெரியும். போட்டியின் போது யாரும் வீரர்களை சந்திக்க அனுமதி இல்லை. மற்றும் வீரர்கள் தங்களுக்கு உரிய பகுதியில் இருந்து செல்ல அனுமதியும் இல்லை. இந்த பிரச்சினை கண்டிப்பாக பிசிசிஐ க்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (க)




## போரின் இறுதிக்...

இலத்தீன் அமெரிக்கா போன்ற ஏனைய நாடுகளில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக் கூறலுக்கு எப்போதுமே காலம் எடுத்துள்ளது. இது தொடர்பில் அனைவரும் பொறுமையுடன் இருக்க வேண்டும். இறுதியில் போர்க்குற்றங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டு, நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படும்.

அனைத்துப் போர்க்குற்றங்களையும் சமமான வகையில் கண்டிக்க வேண்டியது முககியமானது. இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்ள முடியாத கொடுமைகளை இழைத்துள்ளனர்.

உண்மையை வெளிக்கொண்டு வருதல் என்பது மிகவும் அவசியமான விவகாரம். உயிர் தப்பியவர்களுக்கு தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிய வேண்டும்.

தனது கணவனோ, பிள்ளையோ உயிருடன் இருக்கிறாரா என்று தெரிந்து கொள்ளாமல் ஒரு பெண்ணால் எவ்வாறு தனது வாழ்வைத் தொடரவோ அல்லது மீளமைக்கவோ முடியும்? என்று அவர் இச் செவ்வியில் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

## வெலிக்கடை மோதல் கோத்தாவிடம் விசாரணை


வெலிக்கடை சிறைச்சாலையல் கடந்த 2012ம் ஆண்டு இடம் பெற்ற மோதல்தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள மூவர் அடங்கிய குழுவினரால் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் நேற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவிடம் 06 மணித்தியாலங்கள் விசாரணைகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2012-ம் ஆண்டு இடம் பெற்ற சிறைச்சாலை மோதலில் 27 கைதிகள் உயிரிழந்ததோடு 20 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# யுவராஜை விரட்டி விரட்டி அடித்த கெய்ல்

ஐபிஎல் தொடரில் டெல்லி பெங்களூர் அணிகள் மோதிய லீக் ஆட்டத்தில் சுவாரஸ்யமான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி குயிண்டன் டி கொக். அணித்தலைவர் டுமினி



ஆகியோரின் அரைசதத்தால் 5 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் பெங்களூர் அணி, டெல்லியின் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடும் போது 2வது ஓவரில் மழை குறுக்கிட்டது. இதனால் தொடக்க வீரர்களாக களமிறங்கிய கிறிஸ் கெய்ல், அணித்தலைவர் விராட் கோலி அரங்கு திரும்பினர்.

அப்போது யுவராஜ், அமைதியாக நடந்து சென்ற கெய்லை விளையாட்டாக ஒரு இடி இடித்தார். இதனால் கெய்ல் பதிலுக்கு பேட்டால் யுவராஜை அடிக்க வந்தார்.

இருவரும் கொட்டிய மழையில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இரு அணிகளின் மோதலை பார்க்க முடியாத ஏமாற்றத்தில் இருந்த ரசிகர்களுக்கு இவ்விருவரின் விளையாட்டு கண்கொள்ளா காட்சியாக அமைந்தது.மழையால் கைவிடப்பட்ட இந்த ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளி கொடுக்கப்பட்டது.

இதன் மூலம் பெங்களூர் அணி ப்ளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றது. இந்த தொடரில் மோசமாக ஆடிய டெல்லி அணி தொடரை விட்டு வெளியேறியது. (க)

**வகுப்பு**

பல்கலைக்கழக மாணவரினால் தரம் 5 - 11 வரையான மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடம் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். யாழ்ப்பாண நகருக்கு அருகாமையில் இருப்பவர்களுநக்கு முன்னுரிமை வழங்கப்படும். (513)

தொடர்புக்கு :- 0776063064

## நீதி அமைச்...

கையளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, வீரகுமார திஸாநாயக்க, ஜானக்க வககும்புரவுடன் தான் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை கையளிப்பதற்கு இணைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் உட்பட அரசாங்க கட்சி உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா கூறியுள்ளார். (செ-11)

## மாணவி கொலை...

(வயது-24) , பழனிரூபசிங்கம் குகநாதன் (வயது-26) ஜெயரட்ணம் கோகிலன் (வயது-26) ஆகியோரே பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் புங்குடுதீவில் பதற்ற நிலை அதிகரித்துள்ளதனால் பொலிசார் அங்கு செல்வதற்கு தயக்கம் காட்டிவருகின்ற நிலையில் விசேட அதிரடி படையினர் புங்குடுதீவில் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும் சந்தேக நபர்களின் உறவினர்கள் இருவர் வாள்வெட்டில் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/ Service Details | Non - refundable Deposit (R.s.) (Bid fee) | Security Deposit (R.s.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of ANC Clinic | 500.00 | 47,000.00 | 91 | 2.31 | C8 |
| Renovation of Microbiology Lab, Renovation of Media Room and Renovation of Biochemistry Lab | 500.00 | 24,000.00 | 91 | 1.17 | C9 |
| Renovation of Histopathology Lap and Aluminium partition for Neuro Surgical Unit | 500.00 | 25,000.00 | 91 | 1.22 | C9 |
| Iron Girl Works at Wards No 01,02& 04 | 500.00 | 27,000.00 | 91 | 1.33 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 20.05.2015 up to 04.06.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 05.06.2015, late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman)
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
19/05/2015.

(C-1005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் சோகவரலாற்று...

மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற கொடூரத்தின் உண்மைகள் இன்றும் மறைக்கடிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளதாக தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்று காலை நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடைசிக் கட்டப் போரின் போது உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான எமது உறவுகளை நினைவுகூரும் நாளே இன்றைய நாளாகும். இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களை மாத்திரமன்றி உலக நாடுகளில் வாழ்கின்ற அனைத்து தமிழர்களினதும் நெஞ்சங்களை உலுக்கிய சோகமான செய்திகளை காவி வந்த இந்த நாளானது யுத்தத்தால் உயிரிழந்த எம் இனிய உறவுகளுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தும் புனித நாளாகும்.

உலகளாவிய ரீதியில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் ஒருமித்த மனித சிந்தனையில் களங்கத்தை ஏற்படுத்திய ஒரு நிகழ்வே முள்ளிவாய்க்கால் சம்பவம். மனித உரிமைகள் மறக்கப்பட்டு ஊடக உள நுழைவு மறுக்கப்பட்டு சாட்சியில்லாது நடத்தப்பட்ட சமரே முள்ளிவாய்க்கால்.

தடை செய்யப்பட்ட போராயுதங்கள் பாவிக்கப்பட்டன என்று பறைசாற்றின பல்நாட்டு ஊடகங்கள் அப்போது. வெளிநாட்டு உதவிகள் உதாசீனப்படுத்தப்பட்டு உள்நாட்டு உதவிகள் மறுக்கப்பட்டு உண்மை நிலை உரைக்காது விட்டு மக்கள் தொகையைக் குறைத்துக் கூறி அப்பாவிப் பெண்கள் பிள்ளைகள் குழந்தைகளின் உயிர்களைக் காவிச்சென்றதே முள்ளிவாய்க் கால். முள்ளிவாய்க்கால் எமது சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப் பதிவு.

போரிலே உயிரிழந்த எம் உறவுகளை என்றென்றும் நினைவு கூரத் தமிழர்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம்.

முள்ளிவாய்க்கால் எமது வருங்கால அரசியல் பயணத்திற்குத் தளம அமைத்துக் கொடுத்துள்ள ஒரு சம்பவம் என்பதில் எமக்குள் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

ஒன்று இரண்டு அல்ல ஆறு வருடங்கள் கடந்து போய்விட்டன. ஆனால் அக்கொடிய போரிலே உயிரிழந்த பொதுமக்கள் தொடர்பான உண்மைநிலை இதுவரை வெளிக்கொணரப்படவில்லை. அதற்குக் காரணமானவர்களைக் கண்டறிவதற்கான உண்மையானதும் நம்பகத்தன்மைவாய்ந்ததும் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுமான விசாரணைப் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் முடிவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலை தமிழ் மக்கள் மத்தியில் விரக்தியை உருவாக்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் நேரடித் தலையீட்டை ஏற்படுத்தும் பொருட்டு தமிழர் தரப்பும் சர்வதேச நாடுகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அவை இன்னமும் ஓர் தீர்க்கமான கட்டத்துக்குள் உள்நுழையவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

ஐக்கியநாடுகளுக்கான மனிதவுரிமைகள் மாநாடு நடைபெறுகின்ற ஒவ்வொரு தடவையும் போரிலே கொல்லப்பட்டவர்களுக்கான நீதி உறுதிப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்படுவதும் அது இறுதியில் ஓர் காலநீட்சியுடன் முடிவடைந்து போவதுந்தான் நாம் கண்டுள்ள யதார்த்தம்.

காலங்கடந்து கிடைக்கின்ற நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனாகும் எனக் கூறப்படுவதுண்டு. எனவே சர்வதேச நாடுகளும் அதனோடு சம்பந்தப்பட்ட அமைப்புக்களும் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது உயிரிழந்த எமது அப்பாவிப் பொதுமக்கள் தொடர்பிலான உண்மை நிலையினை வெளிக்கொணரும் பொருட்டும் அவர்களுக்கான நீதி கிடைக்கும் பொருட்டும் பொருத்தமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

போரின் போது உயிரிழந்த பொது மக்களுக்கான நீதியைத் தமிழ்த் தரப்பு வேண்டிநிற்பதன் நோக்கம் வெறுமனேகுற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுமட்டுமல்ல.

இது தொடர்பில் வெளிக்கொணரப்படுகின்ற உண்மைகள் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்த உதவும். இதனால் தான் எமது வட மாகாண சபை இனப்படுகொலை சம்பந்தமான தீர்மானத்தை ஏக மனதாக ஏற்று வெளிக்கொண்டு வந்தது. உண்மையை உலகறியச் செய்தது.

அதுமட்டுமல்ல. பாதிக்கப்பட்டவர்களுக்குக கிடைக்கின்ற நீதி தமிழ்ப் பேசும் மக்களது அரசியல் தீர்வு நோக்கிய பயணத்திற்கும் உந்துசக்தி யாக அமையும்.

எனவே தற்போது தோன்றியுள்ள ஓர் சாதக மான நிலைமை மாற்ற மடைவதற்கு முன்னர் காலதாமதத்தை மேற் கொள்ளாது தமிழ்ப்பேசும் மக்களது பிரதான பிரச் சினையான அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் விரைந்து செயற்பட வேண்டிய கடமை நம் அனைவரின் முன்னும் உள்ளது.

விரைந்து செயற்படாத தன்மையும் அளவுக்கதிகமான கால நீட்சியும் பிரச்சினைகளினதும் அதற்கான தீர்வுகளினதும் பரிமாணங்களை மாற்றியமைக்கும் அபாயம் கொண்டது என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் எம்முடனும் மற்றும் சர்வதேச சமூகத்துடனும் ஒன்றிணைந்து தமிழ்த்தேசியத்தின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் விரைந்து தீர்வுகாண முன்வர வேண்டும். இதுவே இலங்கையில் வாழ்கின்ற பல்லின மக்களுக்கிடையில் பரஸ்பர கௌரவத்துடன் கூடிய உண்மையான நல்லிணக்கத்தை உருவாக்கும். இன்றைய சோகம் மிகுந்த நாளில் இதையே உங்கள் அனைவரின் சிந்தனைகளுக்குஞ் சி[illegible] தாழ்த்தி முன்வைக்கின்றேன் என்றார். (செ-4)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

Student VISA — UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia

FREE Assessment

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள

www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C-1006)

# தமிழர் தாயகமெங்கும்...

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் இதே நாளில் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட தினத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் தமிழத் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ்த்தேசிய துக்க நாள் என பிரகடனப்படுத்தியிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் ஆறாவது ஆண்டு தமிழ்த்தேசிய துக்க நாள் உலகம்முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரதானமாக முள்ளிவாய்க்காலில் வடக்கு மாகாண சபையினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வுகள் பெரும் உணர்வு பூர்வமாக நடை பெற்றன.

காலை பத்து மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பிரதான நினைவேந்தல் சுடர் ஏற்றி வைக்கப்பட்டதனையடுத்து தொடர்ந்து தமிழ்த தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவும், மகளிர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், ஏனைய கட்சி மற்றும் பொது அமைப்புக்கள் சார்ந்தோர், பொது மக்கள் தீபங்களை ஏற்றி வைத்தனர்.

உணர்வு பூர்வமாக நடைபெற்ற இந்நிகழ்வின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சர் முள்ளிவாய்க்கால் கொடூரம் தொடர்பில் சிறப்புரையொன்றினையும் ஆற்றியுள்ளார்.

பின்னர் உயிரிழந்த உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. முள்ளிவாய்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் கப்பலடி கடற்கரையில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், து.ரவிகரன் ஆகியோர் கடலில் மலர் தூவி அஞ்சலியில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை முள்ளிவாய்க்காலில் அனுஷ்டிப்பதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் வாகரை மற்றும் பல இடங்களில் பெரும் மக்கள் பங்கேற்புடன் நினைவு சுடர் ஏற்றலுடன் நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றுள்ளன என கட்சியின் பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து முள்ளிவாய்க்கால் தினத்தை உணர்வெளிச்சியுடன் நேற்று காலை ஒன்பது மணியளவில் கைலாசபதி கலையரங்கில் பெருமளவிலான மாணவர் மற்றும் விரிவுரையாளர் கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

இதன்போது பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் வழி பாடுகளும் நடைபெற்றன. பெருமள ´விலான மாணவர்கள் தமது கை களில் மெழுகுவர்த்தி, சுட்டி விளக்கு களை ஏந்தி கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்காக வழிபாட்டில் ஈடுபட்டு பின்னர் ஒவ்வொருவராக அஞ்சலி தீபமும் ஏற்றிவைக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் இனப்படுகொலை தொடர்பான துண்டு பிரசுரங்கள் ஒட்டப்பட்டு துக்க நாளை நினைவு கூரும் வகையில் கறுப்பு கொடிகள் கட்டப்பட்டும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதனை நினைவு கூரும் வகையில் வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன.

இதேவேளை இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு அவர்களது உறவினர்கள் நேற்றைய தினம் கீரிமலையில் பிதிர்க்கடன் செய்வதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்த நிலையில் பெருமளவிலான மக்கள் தமது உறவுகளுக்கு பிதிர் கடன் நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் துவாரகேஸ்வரனால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வழிபாட்டை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். இதில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அனந்தியும் கலந்து கொண்டிருந்தார்.

இப் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற 500 சிவாச்சாரியர்கள் கீரிமலைக்கு வருகை தந்திருந்தனர். பிதிர்கடன் நிறைவேற்ற வரும் மக்களின் போக்குவரத்துக்காக 5 மாவட்டங்களிலுமிருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இறுதிப்போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் 2,000 பேர் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த நிலையில் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் பிதிர் கடனை நிறைவேற்றும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் வடக்கு கிழக்கில் உள்ள இந்து ஆலயங்கள், கிறிஸ்[illegible] தேவாலயங்கள் என்பவற்றிலும் இறுதிப்போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கான விசேட வழிபாடுகள் நடைபெற்றிருந்தன.

இந் நினைவுகூறும் நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வலிசுமந்த நெஞ்சங்களோடு முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்திருந்தனர். புலம்பெயர் தேசங்களில் சுவிற்சர்லாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, ஸ்கொட்லாந்து, இந்தியா, கனடா உட்பட பல நாடுகளில் இந் நினை வேந்தல் நிகழ்வுகள் பெரும் எழுச்சியுடனும் அனுஷ்டிக்கப்பட்டிருந்தன. (செ-4)

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு: 0766398366
(C-1002)

பதவி வெற்றிடங்கள்

(புதியதோர் எதிர்காலத்தை- நோக்கி)

எமது Canadien Company க்கு அடிப்படைத் தகைமையான O/L உடன் எம்முடன் இணைந்து நிரந்தரமாக பணிபுரிய ஓர் அரியசந்தர்ப்பம்.

- Supervisor (மேற்பார்வையாளர்)
- Ass.Manager (துணை முகாமையாளர்)
- Administration (நிர்வாக உத்தியோகத்தர்)
- Accounts (கணக்காளர்)

போன்ற பதவிகளுக்கு துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகள் இருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்.

- சம்பளம் 12000/= - 18000/=
- தங்குமிடம் & உணவு வசதி இலவசம்
- வயதெல்லை 18 - 30

(சி-999)

தொடர்புகளுக்கு :- 0773366453

பதவி வெற்றிடம்

கோல்டன் குறூப் விளம்பர நிறுவனத்திற்கு புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கான பதவி வெற்றிடங்கள்

- வரவேற்பாளர் – பெண் (யாழ் நகரை அண்டியவர்)
- வெளிக்கள உத்தியோகத்தர்கள்
- அலுவலக உத்தியோகத்தர்கள்

ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் காலம் 20/05/2015 (9.00AM-2.00 PM) மணிவரை நடைபெறும்.

- வயது எல்லை 18 – 35
- கல்வித் தகைமை O/L - A/L விரும்பத்தக்கது.
- முகவரி :- இலக்கம் 08, 6-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (512)

தொடர்புகளுக்கு :- 0776219536,07799876[illegible]

# மாணவி கொலை...

இதேவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாணவி படுகொலையுடன சம்பந்தப்பட்ட மூவரின் புங்குடுதீவில் உள்ள வீடுகள் நேற்றையதினம் பொது மக்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தவர்களை வெளியேறிச் செல்லுமாறு கூறிய பொதுமக்கள் அவர்களில் வெளியேறியதும் வீடுகளை தீயிட்டுக் கொளுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இதில் சுவிஸிலிருந்து வந்த சந்தேக நபர் தங்கியிருந்த வீடும் மற்றும் இரு சந்தேகநபர்களின் வீடுமே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

வித்தியாவின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கி



யுள்ள நிலையில் 48 மணிநேரம் பொலிஸ் தடுப்பில் வைத்து அவர்கள் விசாரிக்கப்படுவர் என்று தெரிய வருகிறது.

இதில் மகாலிங்கம் சசிந்திரன் (வயது-31), தில்லைநாதன் சந்திர காந்தன் (வயது-32), சிவதேவன் துசாந்தன் 23 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.